இளந்தமிழா

கவிதைகள்

ம. ப. பெரியசாமித் தூரன்

இயற்றியவை

தமிழ்ப் பேராசிரியர்

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

அவர்கள் முகவுரையுடன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு - அக்டோபர், 1949.
இரண்டாம் பதிப்பு - செப்டம்பர், 1954.
மூன்றாம் பதிப்பு - நவம்பர், 1957.
நான்காம் பதிப்பு - ஆகஸ்ட், 1962.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

விலை ரூ. 3—00

Checked 1969

சுதந்திர நிலைய வெளியீடு—10

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை

அவர்கள் முதற்பதிப்பிற்கு அளித்த

முகவுரை

மறுமலர்ச்சி பெற்றுவரும் தமிழ் மொழிக்குப் பாட்டாலும் உரையாலும் பணி செய்யும் எழுத்தாளர் இந் நாளிற் பலராவர். அன்னவருள் முன்னணியில் உள்ளவர் திரு. பெரியசாமித் தூரன். உள்ளத் துடிப்பும், உயரிய ஆர்வமும் உடைய தூரனார் பாடிய தமிழ்ப் பாடல்கள் 'இளந்தமிழா' என்னும் விளிப்பெயரால் இப்போது வெளியிடப்பட்டுள்ளன.

பலதிறப்பட்ட பாடல்களை உடையது இந்நூல். வீரப் பாட்டும், விடுதலைப் பாட்டும், காதற் பாட்டும், கதைப் பாட்டும், குழந்தைப் பாட்டும், குயிற் பாட்டும், இன்னோ ரன்ன பிறவும் இந்நூலில் அமைந்து இன்பம் தருகின்றன. இன்னும் இக்கவிதையிலே காவிரியாற்றைக் காணலாம்; கார்த்திகைப் பிறையையும் காணலாம் என்றால் மேலும் சொல்ல வேண்டுமா?

புலவர் பாடும் புகழுடைய காவிரியாற்றின் கரையிலே நின்று,

"நந்தா எழில் அரசி!
நாணமுடன் உடல் வளைத்துச்
சிந்தா முறுவலுடன்
செல்கின்றாய் காவிரியே"

என்று கவிஞர் பாடும்பொழுது சிலம்பும் மேகலையும் எழுதிக் காட்டுகின்ற காவிரியின் சித்திரம் நம் மனக் கண்ணெதிரே மிளிர்கின்றது.

இக்கவிஞர் பாடும் பிள்ளைப் பாட்டிலே நமது உள்ளங் கவரும் உயரிய சுவை அமைந்திருக்கின்றது. மாசற்ற மனமும், மழலைச் சொல்லும் உடைய பச்சைக் குழந்தை யைப்பற்றிப் பாடுகின்ருர்; பாருங்கள்:

“ பச்சைக் குழந்தை என்ருல்–எனக்கொரு
பாசம் பிறக்குதம்மா–அதன்
கொச்சை மழலையிலே—உளந்தான்
கொஞ்சிக் களிக்குதம்மா ”

என்ற பாட்டிலமைந்த உணர்ச்சி நம் உள்ளத்தை அள்ளு கின்றதன்ருே? சின்னஞ்சிறு குழந்தையொன்று வீதியிலே நின்று அம்மா அம்மா என்றழைத்து, விம்மி விம்மி விழி நீர் பெருக்கி, முத்து முத்தாகக் கண்ணீர் வடிக்கக் கண்ட போது இக் கவிஞர் பாடிய பாட்டு நம்முள்ளத்தையும் கரைக்கின்றது.

“ தெய்வச் சுடர்க் குழந்தை
சிரித்த முகம் வாடி மிக
நையக் கண்டால் உள்ளம்
நடுங்கு கின்ற தென் செய்கேன்?
கன்னத்தில் முத்து திரக்
கவலை யிருள் தான்படர
என்னத்துக் காக இந்த
இளங்குருத்து வாடினதோ ”

என்று இரங்குகின்ருர் கவிஞர். அழுகின்ற குழந்தையைக் கண்டால் தெய்வமும் இரங்கி அருள் சுரக்குமே என்று கூறுகின்ருர். முன்னொரு நாள் குளக்கரையில் நின்று அழுத குழந்தையைக் கண்டு ஆற்ருது வெளிப்பட்டுப் பாலடிசில் ஊட்டிய பார்வதியம்மையின் செயலை அதற்கு ஒரு சான்ருகக் காட்டுகின்ருர்.

குழந்தையின் துயரம்கண்டு தரியாத கவிஞர் உள்ளம் ஒரு பறவைக் குஞ்சையும் கண்டு உருகுகின்றது. காக்கை கூடு கட்டியிருந்த மரத்தின் அடியில் மாண்டு கிடந்தது ஒரு குயிற் குஞ்சு. கரும் பட்டுப்போன்ற அதன் அருமை யான உடலைக் கொத்தித் துளைத்திருந்தது காக்கையின் மூக்கு. இக்கொடுமையைக் கண்டு கொதித்தது கவிஞர் உள்ளம். இளவேனிற் காலத்தில் மாஞ்சோலையில் மறைந் திருந்து இங்கிதமாய்ப் பாடி எல்லோரையும் மகிழ்விக்கும் குயிற் பிள்ளையைக் கருங் காக்கை கொத்திக் கொன்றதே என வருந்துகின்றார்.

"வசந்தத்தின் தூதுவனை
மாஞ்சோலையின் னிசையை
கசந்த மனத்தாலே
காக்கை கடித்த தந்தோ"

என்று பழிக்கின்றார். இன்னும் ஆற்றாமை தீரவில்லை. காக்கையின் கடுஞ்செயல் அவர் கருத்திற் பாய்ந்து உறுத்துகின்றது.

காக்கையே உன் நிறமும் கறுப்பு; நெஞ்சமும் கறுப்பு; மூக்கும் கறுப்பு; குரலும் கறுப்பு;

"கருவண்ணக் கருமூக்கி
கருமனந்துக் கருங்குரலி"

என்று ஏசுகின்றார்.

உலகம் போற்றும் உத்தமராகிய காந்தியடிகளை மனக்கோயிலில் வைத்து வழிபடும் தொண்டர் பல்லா யிரவருள் இக் கவிஞரும் ஒருவர். சத்தியத்தின் திருவுரு வாய் விளங்கிய சாந்தமுனி காந்தி மகான் செந்நீர் சொரிந்து மடிந்தபோது இக் கவிஞர் மனம் இடிந்து பாடிய பாட்டல் இறவாப் பெருங் கவிதையாகும்.

" கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமிட்டுப் பாரதத்தாய்
கைத்தளையைக் களைந்தெறிந்த
அத்தனவன் திருமார்பில்
அறிவிழந்தான் சுட்டவுடன்
ஆ!ராமா எனும் போதே
சத்தியம் செத்ததோ
தருமம் ஒளி மங்கிற்றோ "

என்று அதிர்ச்சியால் மனங் கலங்கி மயங்குகின்றார். பின்பு தெளிவு பிறக்கின்றது; உண்மை புலனாகின்றது. அவர் இறந்த நாள் அன்றோ என்றும் இருந்த நாள் என்றெண்ணி ஆறுதல் அடைகின்றார்.

" காந்தி யெனும் சத்தியந்தான்
கார் ஈயக் குண்டேறிச்
சிந்தும் குருதியினால்
சிரஞ்சீவி யாயிற்றே "

என்பது ஓர் அருமையான கவிதை. சிரஞ்சீவியாகிய காந்தியின் நெறியே உலகத்தைச் சீராக்கும் செந்நெறி யென்பது இக்கவிஞர் கொள்கை.

அன்பைச் சுருக்கி, அறிவைப் பெருக்கி, அறத்தை வேரறுக்கும் அணுகுண்டு நெறியிலே செல்லாது காந்தி நெறியைக் கடைப்பிடித்தால் உலகம் வாழும் என்று உறுதியாகக் கூறுகின்றார்;

" அறிவால் வளர்ந்தோங்கி
அணுவைப் படையாக்கும்
திறமாம் செருக்கினிலே
அன்புள்ளம் சிறுத்திட்ட
அவனிதான் அழியாமல்
அவன்வாக்கே காத்திடுமால் "

என்று கவிஞரைப்போல் நம்பியே கைதொழுவோம் நாமும்.

அறப்படையால் மறப்படையை வெல்லலாம் என்பதை உலகறியக் காட்டிய பெருமகனாகிய காந்தியைப் பின்பற்றி எத்தனையோ தியாகிகள் பாரத நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டார்கள். அன்னவருள் ஒருவர் திருப்பூர்க் குமரன். அறப்போர்க்களத்தில் தகவிலர் கையால் தடியடி பட்டு, 'காந்தியின் ஆணையை மீறிடோம் பகைக் கைத்தடி தன்னையும் சீறிடோம்' என்று சொல்லிக் கொண்டே இன்னுயிர் துறந்த அவ்வீரன் தமிழகத்தின் பெருமையை முன்னிலும் ஒருபடி உயர்த்தி விட்டான் என்று கூறுதல் மிகையாகாது.

" உடலை நொறுக்கி அடக்கினால்—நெஞ்சில்
ஓங்குபேர் ஆர்வம் ஒடுங்குமோ ?
கடலின் கொதிப்பைக் குறுந்தடி—வீச்சில்
கட்டுப் படுத்தவும் கூடுமோ ?"

என்று அறப்படையின் வெற்றியை முழக்குகின்றார் கவிஞர்.

திருப்பூர்க் குமரனைப் போன்ற தியாகிகளைப் பெற்ற வீரத் தாய்மார்கள் இந்நாட்டில் முன்னாள் விளங்கினர் என்பது பழந் தமிழ் நூல்களால் அறியப்படுவதாகும். அத்தகைய வீரத்தாய் ஒரு கவிதையிலே காட்சி தருகின்றாள். முதுமை சான்ற ஒரு மாது நரம்பெழுந்து உலர்ந்த கையள்—நாயகனையும், மைந்தர் நால்வரையும் போர்க்களத்திற் பறிகொடுத்த வீரப்பாவை—தன்நாட்டு மன்னனாகிய பிரதாபசிங்கனைச் சொல்லாலும் செயலாலும் ஊக்குவித்து மானங்காத்த விழுமிய வரலாறு 'கிழவியும் ராணாவும்' என்ற கதைப் பாட்டிலே அழகுற விளக்கப்பட்டுள்ளது.

காதல் புரியும் அரம்பையர்போல் இளங் கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடல்லவா இது ? அந்த வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் முல்லை மலர் ஏந்திய ஒரு மெல்லியலாளையும், கருக்கரிவாள் கைக்கொண்டு கழனிக்குச் செல்லும் ஒரு கன்னியையும் கவிதையிலே படமெடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். இருவரும் கருவமிருக்கும் மங்கைப் பருவத்தார்; எளிமையில் அரிய எழிலுடையார். இவர் வீதியிலே நடந்து செல்லும் அழகினைக் கவிதையிற் கண்டு மகிழ்க.

இவ்வாறு கவிச்சுவை யனைத்தும் இனிதமைந்த இந்நூலை இளந்தமிழ் உலகத்துக்கு உரிமையாக்குவார்போல் 'இளந்தமிழா' என்னும் பெயரால் வெளியிட்டுள்ளார் ஆசிரியர். தன் பழமையும் பெருமையும் அறியாது, ஊக்கமிழந்து உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் இளந்தமிழனைத் தட்டி யெழுப்பித் தகைசான்ற நல்லுரை பகர்தலே இந்நூலின் தலையாய நோக்கமாகும்.

" வள்ளுவனும் கம்பனுமே
வளர்த்த சுவைத் தீந்தமிழின்
தெள்ளமுதங் கொண்டவன் நீ
சீர்குலையக் காரணமேன் ?"

என்று கேட்கின்றார் கவிஞர். தெள்ளமுதம் வழங்கும் வள்ளுவரையும் கம்பரையும் மறந்ததுதான் காரணம் என்று சொல்லவா வேண்டும் ?

ரா. பி. சேதுப்பிள்ளை.
4—10—49.

இரண்டாம் பதிப்பின் முகவுரை

கவிதையென்றால் எனக்கு மற்ற இலக்கியத் துறைகளைவிட விருப்பம் அதிகம். நல்ல கவிதைகளடங்கிய நூல் ஒன்று கையிலே கிடைத்துவிட்டால் எனக்கு உலகமே மறந்துபோகும். கவிதை உலகத்திலே மகிழ்ச்சியோடு உலாவிக்கொண்டிருப்பேன்.

ஆனால் நான் கவிதைத் தொகுப்பைச் சுவைக்கும் வழி பலருக்கு விநோதமாகத் தோன்றும். முதல் பக்கத்திலிருந்து கவிதைகளை நான் படிக்கமாட்டேன். ஏதாவது ஒரு பக்கத்தைத் திறப்பேன். அங்கேயுள்ள கவிதையைப் படித்து அதன் சுவையை அனுபவிக்க முயல்வேன். அதன் பிறகு வேறு ஏதாவது ஒரு பக்கத்திற்குப் போய்விடுவேன். வரிசையாகக் கவிதைகளை நான் படிப்பதில்லை. இந்த முறையையே உங்களுக்கும் சிபார்சு செய்கிறேன்.

கவிதைத் தொகுப்பு என்பது பலவகைப்பட்ட மலர்கள் நிறைந்த சோலை போன்றது. பல வழிகளையுடைய அந்தச் சோலையிலே எதேச்சையாக ஏதாவது ஒரு வழியிலே சென்று புகுந்து திரியும்போது கண்ணிலே எதிர்ப்படும் ஏதாவது ஒரு மலரின் அழகை அனுபவிக்க வேண்டும். பொருட்காட்சி மண்டபத்திற்குள் புகுந்து பார்ப்பதுபோல முதலிலிருந்து தொடங்கக்கூடாது.

மலையேறுகின்றவன் முதற்படியில் கால் வைத்து ஒவ்வொரு படியாக ஏறவேண்டும். தனிக் கவிதைகளின் தொகுப்பு மலையல்ல; அது மலர்ப் பூங்கா.

இன்னும் ஒரு முக்கிய விஷயம். கதை படிப்பது போலக் கவிதையைப் படிக்கக் கூடாது. கதையைப் போல அத்தனை எளிதாகவும் கவிதையின் சுவை முழுவதும் தோன்றிவிடாது. ஆழ்ந்து பார்க்கப் பார்க்கத் தான் கவிதையின் முழு வடிவமும் பொருளும் சுவையும் வெளியாகும்.

கவிதை தரும் முழு இன்பத்தையும் அவசரத்திலே பெற முடியாது. ஒரே முறை படித்தும் கவிதையைப் பூரணமாக அனுபவிக்க முடியாது.

ஒருநாள் ரெயில் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது நான் கையிலே ஒரு கவிதை நூலை வைத்திருந்தேன். அதைக் கண்ட நண்பர் ஒருவர், "ரெயிலில் போகும் வேகத்திலே கவிதையைச் சுவைக்க முடிகிறதா உங்களுக்கு?" என்று கேட்டார்.

மனதைக் கவரும் சம்பவங்கள் நிறைந்த கதைகள் ரெயில் பிரயாணத்திற்குப் பெரிதும் ஏற்றவையாக இருக்கலாம். ஆனல் ரெயில் பிரயாணத்திலும் கவிதையைச் சுவைக்க நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். ஒரே ஒரு சிறிய கவிதையை மட்டும் படித்துவிட்டுப் பிறகு அதையே திருப்பித் திருப்பி மனத்திற்குள்ளேயே படிப்பது, உரக்கப் படிப்பது, அதைப்பற்றியே சிந்திப்பது இப்படியாகப் பயணத்தை முடிப்பேன்.

கவிதையை ஒருமுறை படித்தால் போதாது. பல முறை படிக்கவேண்டும். கவிதையின் ஓசைநயம், சொல் நயம், அதன் கற்பனை, அது விவரிக்கும் உள்ளக் கிளர்ச்சிகள் எல்லாம் நன்ருக நமக்குத் தெரியவேண்டும். அப்பொழுதுதான் அதன் முழுச் சுவையும் வெளிப்படும்.

அவசரமும், வேகமும் நிறைந்த யுகம் இது என் பார்கள். அந்த அவசரத்திலே கவிதையை நன்கு சுவைப்பது சிறிது கடினந்தான். அதனாலேயே கவிதைகளுக்கு ஓரளவு விளக்கம் கொடுப்பது நல்லதென்று எனக்குத் தோன்றியது. இந்தப் பதிப்பிலே குறிப்பாகச் சில சொற்கள் சேர்த்திருக்கிறேன். கவிதைகளை எளிதில் சுவைக்க அவை ஓரளவு பயன்படும் என்பது என் கருத்து.

இப்பதிப்பிலே புதிதாகச் சில கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. முதற்பதிப்பில் வெளியான கவிதைகளில் ஆங்காங்கு ஒரு சில மாறுதல்களும் செய்திருக்கிறேன்.

கவிதைப் பூஞ்சோலை உங்கள் முன்னால் இருக்கிறது. எல்லா மலர்களும் எல்லோருக்கும் ஒரேவகையான இன்பத்தைத் தருமா? அவ்வாறு தருவது இயல்பல்ல. சுவை வேறு படுகிறது; விருப்பம் வேறுபடுகிறது. அவற்றிற்கு ஏற்றவாறே நாம் கவிதைகளை வரவேற்போம். சுவையும், விருப்பமும் வேறுபட்டாலும் அவற்றைத் திருப்தி செய்வதற்கு முதலில் பூஞ்சோலைக்குள்ளே புகுந்து பார்க்க வேண்டுமல்லவா? ஏதாவது ஒரு வழியிலே சென்று, சோலையிலே விருப்பம்போல உலாவ உங்களை அழைக்கிறேன்.

வணக்கம்.

பெ. தூரன்.

மூன்றாம் பதிப்பின் முகவுரை

இலக்கியத்தில் கவிதையே முதலிடம் பெறுகின்றது. கவிதையைப்போல இன்பம் பயப்பதும் உள்ளத்தை நெகிழச் செய்வதும் வேறொன்றுமில்லை. அதற்குள்ள இந்தப் பெரிய ஆற்றல் எங்கே பிறக்கின்றது? அதன் சொற்களிலா? சந்தத்திலா? அரவ வனப்பிலா? யாப்பு அமைதியிலா? அணி அலங்காரத்திலா? இப்படிக் கேள்விகளை அடுக்குவது எளிது; பதில் கூறுவது அத்தனை எளிதல்ல.

ஆனால் கவிதை நம்மை என்னவோ செய்கிறது. எழுதுகின்றவனையும் அது தனது வலைக்குள்ளே இழுத்துக் கொள்ளுகிறது.

கவிஞன் தான் அனுபவித்ததை மற்றவர்களையும் தன்னைப்போலவே அனுபவிக்கச் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதற்காக அவன் எத்தனையோ உத்திகளைக் கையாளுகிறான். தன் உள்ளத்தில் எழுந்த ஒரு கிளர்ச்சி அப்படியே பிறர் உள்ளத்திலும் எழுமாறு கவிதையின் வாயிலாகத் தூண்ட முனைகின்றான்.

மின்னல் பூ என்ற மற்றொரு கவிதைத் தொகுதியை அண்மையிலே வெளியிட்டேன். உள்ளத்து உணர்ச்சி மின்னல்களின் பூச்செண்டு அது. அச்செண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கின்றது. அதை அறிகின்றபோதும் இத்தொகுப்பின் மூன்றாம் பதிப்பைக் காணும்போதும் நீங்கள் இந்தக் கவிதை இன்பத்தைப் பெறுவதில் என்னோடு சேர்ந்து நிற்கிறீர்கள், கவிதையைப் போற்றுகிறீர்கள் என்ற பூரிப்புப் பொங்குகிறது. கவிஞனுக்கு வேறென்ன வேண்டும்? நன்றி.

20—11—57. பெ. தூரன்

நான்காம் பதிப்பின் முகவுரை

இத்தொகுதியிலுள்ள கவிதைகளைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்து மேலும் ஒரு புதிய பதிப்பு வெளிவரப் புரிந்துள்ள அன்பர்களுக்கு என் உளங் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதை தவிர வேறு ஒன்றும் எழுத நான் விரும்பவில்லை. ஒன்று மட்டும் குறிப்பிடத் தோன்றுகிறது. மின்னல் பூ, நிலாப் பிஞ்சு ஆகிய எனது வேறு இரண்டு கவிதைத் தொகுதிகளைப் போலவே இத்தொகுதியும் இப்பொழுது உயர்ந்த தாளில் அச்சிடப்பெற்று, தடித்த அட்டைக் கட்டடத்தில் புதிய உருவம் பெற்று வருகிறது. நன்றி, வணக்கம்.

15—8—1962,
சென்னை.

பெ. தூரன்.

பொருளடக்கம்

எண்	தலைப்பு		பக்கம்
1.	இளந்தமிழா	... ...	17
2.	சேரி விளையாட்டு	... ...	19
3.	அழுங் குழந்தை	... ...	23
4.	பச்சைக் குழந்தை	... ...	25
5.	குயிற் குஞ்சு	... ...	26
6.	பூக்காரி	... ...	30
7.	காவிரி	... ...	33
8.	கண்ணீர்	... ...	36
9.	கருக்கரிவாள்	... ...	38
10.	இளமை	... ...	40
11.	காதல்	... ...	41
12.	எதிர்பார்த்தல்	... ...	42
13.	அதுவா வெகுதூரம்	...	43
14.	மறைந்த ஜோதி	... ...	46
15.	கவிதைச் சொல்	... ...	51
16.	கவிக்கனல்	... ...	53
17.	பொங்கல்	...	55
18.	அலைகள்	... ...	57
19.	சாந்தி	... ...	58
20.	பதில்	... ...	59
21.	தோற்றம்	... ...	60
22.	பிரார்த்தனை	... ...	61
23.	சத்தியம்	... ...	63
24.	வாழ்க காந்தி	... ...	69
25.	இருளும் ஒளியும்	... ...	71
26.	அறிவாய் நீ	... ...	74
27.	அன்னை கையின்	... ...	76
28.	ஜேய் ஹிந்த்	... ...	78

எண்	தலைப்பு		பக்கம்
29.	நாணம் ...	...	80
30.	மேலே பற	...	81
31.	சுதந்திரத் திருநாள்	...	82
32.	விலையில்லா மாணிக்கம்	...	83
33.	செல்லடா! ...	...	84
34.	கார்த்திகைப் பிறை ...	...	86
35.	நினைவு அலைகள் ...	...	88
36.	சோதனை ...	...	91
37.	அறிவு தெளிந்தேன் ...	...	92
38.	மனங்கசந்து போனதுவோ	...	94
39.	மானிடா எழுக ...	...	96
40.	கடிதம் ...	...	98
41.	நீல மலர்க்கண் ...	...	99
42.	காந்தி அடிகள் ...	...	100
43.	வீரன் வழிநடைப் பாட்டு	...	101
44.	அடிமையின் வேண்டுகோள்	...	103
45.	யவனன் பாட்டு ...	...	105
46.	யாரது	...	106
47.	வாழ்க்கைப் பிரயாணம்	...	107
48.	அழைப்பு ...	...	109
49.	அன்பு வழி ...	...	111
50.	காதலி கடிதம் ...	...	116
51.	காதல் ஏக்கம் ...	...	118
52.	அவலம் ...	...	121
53.	பெலால் சென் ...	...	123
54.	தியாகம் ...	...	125
55.	வீரன் குமரன் ...	...	128
56.	கிழவியும் ராணுவும் ...	...	132
57.	பிருதிவிராஜ்—சம்யுக்தை	...	137
58.	ராதை பாட்டு ...	...	139
59.	எந்தவகை உணர்ந்தீர்	...	140
60.	பாரதி ...	...	141
61.	ஆசை இளநங்கை ...	...	142
62.	கண்ணுதல் போல ...	...	143
63.	ஐயபாரதம் ..	...	144

கையுறை

என் உள்ளத்திலே எப்பொழுதும் நீ இருக்கிறாய்.
உன்னை என்னவென்று அழைக்கட்டும்?
எந்த அன்புப் பெயர் உனக்குப் பொருந்தும்?
என் உயிரே என்று சொல்லட்டுமா?
ஆமாம்——நீ என் உயிர்தான்.
உன்னை யாரென்று உலகம் அறிந்துகொள்ள வேண்டாவா?
உனக்கு அதுபற்றிக் கவலை ஏது?
என் உள்ளத்துடிப்பு இக்கவிதைகள்.
நீயே அத்துடிப்பின் உயிர்.
உனக்கே இந்நூலைக் கையுறையாக வழங்குகிறேன்.

பெ. தூரன்

இளந்தமிழா

இளந்தமிழா எழுந்திரடா !
இன்பமெலாம் கொணர்ந்திடுவாய்
வளம்பெருக்கித் தமிழ்நாட்டை
வானுடாய்ச் செய்திடுவாய்.

காதல்அறம் வீரமெலாம்
களித்திருந்த மண்ணிதிலே
பேதமையும் ஏழமையும்
பிழைத்திருக்க விடலாமோ ?

குறிஞ்சிமணம் பாரிகொடை
கொல்புலியின் கொடிஇமயம்
பொறித்திடுமோர் தனிவீரம்
போகவிட்டு வாழ்வாயோ ?

வள்ளுவனும் கம்பனுமே
வளர்த்தசுவைத் தீந்தமிழின்
தெள்ளமுதம் கொண்டவன்நீ
சீர்குலையக் காரணமேன் ?

கச்சைகட்டி மார்தட்டிக்
கண்களிலே ஒளிவீசத்
துச்சமெனப் பயந்தள்ளித்
துணிவுடனே புறப்படுவாய்.

வாழ்க்கையிலே சமத்துவமும்
மனத்தினிலே உயர்நோக்கும்
மாட்சிமிகும் அறநெறியும்
ஆட்சிசெயப் போரிடுவாய்.

அனைவருக்கும் பொதுஉரிமை
அனைவருக்கும் பொதுநீதி
அனைவருக்கும் பொதுஉடைமை
ஆக்கிடவே தோள் புடைப்பாய்.

மக்களெலாம் ஓர்குலமாம்
மாநிலமே ஒருவீடாம்
தக்கநெறி இதுகண்ட
தமிழன்நீ மறவாதே.

இளந்தமிழா எழுந்திரடா!
இன்பமெலாம் கொணர்ந்திடுவாய்
வளம்பெருக்கி வையகத்தை
வானுடாய்ச் செய்திடுவாய்,

குறிஞ்சி மணம்-மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்திற்கு உரியதாகக் கூறப்படும் காதல் மணம்,

பாரிகொடை-பாரி என்னும வள்ளலின் கொடைத்திறமை புகழ்பெற்றது.

மக்களெலாம் ஓர் குலமாம் மாநிலமே ஒரு வீடாம்-யாதும் ஊரே, யாவரும் கேளிர்.

சேரி விளையாட்டு

உப்புப் பொரிந் துதிரும்
உவர்மண் ணிடிந்த சுவர்
தப்பி நிமிர்ந் தெழுந்தால்
தலையிடிக்கும் தாழ் கூரை

மக்கி யழிந்து வரும்
வறுமை வளர் சிறுகுடிசைப்
பக்கத்தில் விளையாடும்
பாலகனைப் பாரீரோ !

கந்தலொரு கௌபீனம்
கண்டவுடல்; மற்றும் அனல்
சிந்தும் வெயில் கடுங் குளிரே
சிறுவனுக்கு மேற் போர்வை ;

சிரங்கு சொரியுங் கை ;
செம்பட்டை யானதலை ;
உறங்கி விழுங் கண்கள் ;
உலர்ந்த சிறு கன்னங்கள்—

குந்தியவ னுட்கார்ந்து
கூவிடவே ஓடியங்கு
வந்த சிறுமி யவள்
வரிசைதனைக் கேளீரே ;

கந்தல் அவன் ஆடை,
கன்னிக் கதுவு மில்லை;
இந்த உலகில் வந்த
இயல்தோற்றம் கொண்டிருந்தாள்—

அன்புடனே கூடி அவர்
அரிதாக மண் சேர்த்துச்
சின்னச் சுவர் எழுப்பிச்
சிற்றில்ல மாக்கி யதில்

பனங் கொட்டை யொருநான்கு,
பாதையிலே கண்டெடுத்த
கனங் கெட்ட லாட மொன்று,
கண்ணுடித் துண்டிரண்டு,

ஓடையிலே போயெடுத்த
உருண்டைக்கல் லிருமூன்று,
ஓடொன்று கூழ் காய்ச்ச—
ஒரு குடும்பம் செய்கின்றார்.

மண்ணிலே வீடெடுத்து,
வாழ்க்கையையே விளையாடி,
என்னென்ன இன்பங்கள்
இளங்குஞ்சு கண்டாரோ!

பச்சை மனங் கட்டிவைத்த
பைஞ்சோலை சூழ்மாடம்;
இச்சையெலாம் ஏவு முன்னர்
இனிது செயும் ஏந்திழைகள்;

சிந்தை கவர் ஓவியங்கள் ;
    செயல் மிக்க சிற்பங்கள் ;
கந்தங் கமழுகின்ற
    காமன்மகிழ் பள்ளியறை ;

நளபாகத் தறுசுவையில்
    நல்ல நல்ல உண்டிவகை ;
அளகா புரியது போல்
    அளவற்ற செல்வங்கள்;

காலுக்குச் சோடு; நல்ல
    காசி நகர்ப் பட்டுடைகள் ;
மேலுக்குப் பொன்னணிகள்;
    விதவிதமாய்ச் சுண்ணங்கள் ;

இவை யெல்லாம் கற்பனைசெய்
    தின்பமிகப் பெறுவாரோ ?
இவை யனைத்தும் கற்பிக்க
    எவ்வா றறிந்திடுவார் ?

கனவுலகிற் காண்பதற்கும்
    கருத்திலவை வேணுமன்றோ ?
மனக் கோட்டை கட்டுதற்கும்
    வகையறியா ஏழ்மையினர் !

இடிந்த சுவர் விழுகூரை
    எறும்புவளை பழங் கஞ்சி
மடிந்த வால் பன்றியலால்
    மற்றென்ன கண்டுள்ளார் ?

சேரி விளையாட்டு

சிறுமியவள் அந்தச்
சிறு வீட்டின் உள்ளிருந்து
உரைத்தாள் ஒரு வார்த்தை ;
"ஓடிவா, கஞ்சி குடி,

மண் வெட்டப் போகணுமாம்
பண்ணையார் ஏசுகிறார்."
இன்பமுள்ள விளையாட்டும்
இதுதானோ, வேறில்லையோ ?

வாழ்க்கை தனிற் புகுந்து
வல்லடிமை தான் செய்து
பாழ்த்த வயிற்றினுக்கே
பசி தீர்த்து மாயுமுனர்

கள்ளமறி யாக்குழந்தைக்
கற்பனையில் ஆண்டானாய்
உள்ளமதில் எண்ணியவர்
உவகையுற லாகாதோ ?

துன்பத்திலே தோன்றித்
தொழும்பே வடிவானோர்க்
கின்ப விளையாட்டும்
இல்லையோ இவ்வுலகில் ?

அழுங்குழந்தை

[ஒருநாள் மாலையில் உலவப் போனபோது வீதியில் தனியாக நின்று அழுதுகொண்டிருந்த குழந்தையைக் கண்டு பாடியது.]

ஆருடைய குழந்தைஇது
அழுதுகொண்டு நிற்கிறதே ?
சீருடைய முகம் சிவக்கச்
சிறுகையால் கண்பிசைந்து
விம்மிவிம்மித் தேம்பி
விழிநீர் மிகப்பெருக்கி
அம்மம்மா என்று சொல்லி
அங்குமிங்கும் பார்க்கிறதே !

(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே !)

மையிற் படர்ந்த இருள்
மாய்க்கவரும் ஞாயிறுபோல்
வையத்திருள் வாழ்வை
வளரின்ப மாக்க வரும்
தெய்வச் சுடர்க்குழந்தை
சிரித்தமுகம் வாடிமிக
நையக்கண் டால் உள்ளம்
நடுங்குகின்ற தென்செய்வேன்?

(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே !)

கன்னத்தில் முத்துதிரக்
கவலையிருள் தான்படர
என்னத்துக் காகஇந்த
இளங்குருத்து வாடினதோ ?
சின்னஞ் சிறுமொட்டு
சிரித்துமகிழ்ந் தாடாமல்
கொன்னி இதழ்பிதுக்கிக்
குலைகின்ற காரணம்என்?

(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே !)

பூவுலகைப் பார்க்கவந்த
பொன்னூட்டுத் தூதெனவே
மேவுமிளங் குழந்தையழ
விடலாமோ ? விண்ணோர்கள்
தாமிதனைச் சகிப்பாரோ ?
தடத்தருகே மைந்தனழத்
தேவியரன் தன்னோடும்
தேடிவந்த தறியீரோ ?

(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே !)

பச்சைக் குழந்தை

பச்சைக் குழந்தை என்றால்—எனக்கொரு
பாசம் பிறக்குதம்மா—அதன்
கொச்சை மழலையிலே—உளந்தான்
கொஞ்சிக் களிக்குதம்மா

சின்னஞ் சிறு சிரிப்பில்—கவலைகள்
தேய்ந்து மடியுதம்மா—அதன்
மின்னும் உடல் வளைவில்—அமுதின்
விண்சுவை ஏறுதம்மா

வண்ணச் சிறு விருந்தை—அன்பில்லா
வார்த்தைகள் சொல்லாதீர்—அதன்
கண்ணில் கலக்கம் என்றால்—என்னுள்ளம்
கன்றிக் கரையுமம்மா

தெய்வப் புது மலரை—என்றுமே
சீறி விழிக்காதீர்—அதன்
மெய்யில் அடியும் பட்டால்—என்னுள்ளம்
வெடித்துப் போகுமம்மா

ஆட்டமும் காட்டிடு வீர்—குழந்தையை
அன்பில் வளர்த்திடு வீர்—அதன்
வாட்டமெலாங் களைந்தே—இன்பத்தில்
மரலச் செய்திடு வீர்

அன்பில் மலர்ந்து விட்டால்—இளம்பூ
ஆனந்தத் தேன்சொரியும்—அதன்
இன்பப் பெரு வாழ்வே—நமக்கினி
என்றும் இனிப்ப தம்மா.

குயிற் குஞ்சு

[ஆண் குயில் இனிமையாகப் பாடுகிறது. பெண்குயில் அதைக் கேட்டு இன்பத்தில் மூழ்கியிருக்கிறது. பாடுவதற்கும், அதைக் கேட்டு மகிழ்வதற்கும் அவை கற்றுக்கொண்டிருக்கின்றனவே ஒழியக் கூடு கட்ட அவை கற்றுக்கொள்ளவில்லை. முட்டையிடுகின்ற பருவத்திலே பெண் குயில் தந்திரமாகக் காக்கையின் கூட்டிலே முட்டையைச் சேர்த்துவிடும். ஆண் குயிலும் அதற்குத் துணை புரிவதுண்டு.

காக்கை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். அன்புடனே குஞ்சுகளைப் பேணி வளர்க்கும். ஆனால் அந்தக் குஞ்சுகள் தன்னுடையனவல்ல வென்று கொஞ்சம் சந்தேகம் வந்துவிட்டாலும் தாயாகவிருந்த அந்த மூடக் காக்கை பேயாக மாறி அவற்றைக் கொத்திக் கொன்றுவிடும். அவ்வாறு கொத்துண்டு குருதிதோய வேப்பமரத்தடியில் இறந்து கிடந்தகுயிற் குஞ்சொன்றைப் பார்த்தபோது இந்தப் பாடல் உருவாயிற்று.]

கரும்பட்டுப் போன்றவுடல்
கைவளராப் பூங்குஞ்சு
விரும்பிக் கவிமகிழும்
விண்பாட்டின் மெல்லரும்பு

வாடிக் களையிழந்து
வாய்திறந்து மாண்டிடவே
மூடச் சிறுகாக்கை
மூர்க்கமுடன் கொத்திற்றோ?

கருவண்ணக் கருமூக்கி
கருமனத்துக் கருங்குரலி
பெருமையாய் வளர்த்துப்பின்
பிணமாகச் செய்ததென்னே?

மாமரத்தில் இசைக்குயிலன்
வண்ணமொழி தான்கேட்டுத்
தேமதுரப் புதுக்குரலில்
சிறுவீணை மீட்டினையோ?

கந்தருவப் பண்கேட்டுக்
கண்ணுற்றைக் காகமது
சிந்துந்தே னிசை வடிவைச்
சிதைத்திட்ட தையையோ!

கனவுலகம் தோற்றுவிக்கக்
காமஞர் பாராள
இனியிங்குத் தோன்றிடுநல்
லிளவேனில் அழகடைய

ஓங்கு மூன்றன் பாட்டெல்லாம்
உலகறியா தடங்கினவே
வேம்பின் கிளையொன்றில்
வீடுசெயக் கண்டுவந்த

சோம்பற் சிறுகுயிலி
சோரஞ்செய் திடுமுட்டை
தாங்கிய யடைகாத்துத்
தன்மகவாய்ப் பேணிமிக்க

கறுத்த உடல்வளரக்
கண்குளிர நோக்கிப்பின்
இனித்த குரல்கேட்டு
இப்பெரிய கோபமும்ஏன் ?

நடுங்கியுயிர் போமுன்னே
நல்லிசையன் பட்டதுயர்
கொடுமைக்காய் எப்படித்தான்
கூசாமற் பார்த்தனையோ

தேடி யிரைகொணர்ந்தாய்
திசையெல்லாஞ் சென்றலைந்தாய்
வாடிப் பசித்திருந்தே
வந்துணவு தான்தந்தாய்

தாயென் றுனைமதித்துத்
தண்ணமுத வாயெடுக்கப்
பேயைப்போ லானதுமேன்
பெருந்தலைச்சி நீதானே ?

அன்புதனை யல்லால்மற்
றறியாத பைங்குழலும்
துன்பப் பெருமைக்கால்
துளைபட்டுப் போயிற்றே!

வசந்தத்தின் தூதுவனை
மாஞ்சோலை யின்னிசையைக்
கசந்த மனத்தாலே
காக்கை கடித்த தந்தோ!

தன்னைப்போற் சிறப்பில்லாத்
தன்மையரை நேசித்து
மன்னுந் திறம்படைத்த
மாண்புடையார் மேலெரிச்சல்

கொள்ளும் உலகத்துக்
கூட்டத்தில் காகமொன்றோ ?
உள்ளம் புழுங்கியவர்
ஓங்குதிறன் தான் நசுக்கும்

சின்னத் தனமெல்லாம்
தெரிகின்ற திங்கேயும்
வண்ணப் பறவைகளின்
வாழ்க்கையிலும் இதுதானோ ?

என்றே உலகத்தில்
எல்லோரும் ஒருமனதாய்
நன்றான சீர்த்திறனை
நனியோங்கப் போற்றிடுவார் ?

கைவளரா-பறவைக்கு இறக்கைகளே கைகள்.

விண் பாட்டின் மெல்லரும்பு-விண்ணிலிருந்து வரும் கந்தருவ கரனத்தின் மெல்லிய அரும்புபோன்றது அந்தக் குயிற் குஞ்சு.

பூக்காரி

முல்லைப்பூ என்று சொல்லி
முல்லை நகை தான் மலர
மெல்லியலாள் அன்னம்போல்
வீதி வழி தானடந்தாள்.

சாயம் விட்ட பழஞ்சேலை
தையல் மிகக் காணுகின்ற
தேயும் முகிற் கந்தையிலே
சேர்ந்தசைந்த மின் போன்றாள்;

பூவுலகோர் பரவசமாய்ப்
புகழ்ந்தோதும் அஜந்தாவின்
ஓவியமாம் பெண்ணொருத்தி
உயிர்பெற்று வந்தது போல்

கக்கத்தில் சிறு கூடை
கையொன்றில் தானிடுக்கிப்
பக்கத்தில் ஒரு கையைப்
பாங்குடனே வீசி வந்தாள்;

நெற்றியிலே செம் பொட்டு,
நீள்விழியில் கவியமுதம்;
கற்றையிலே சேர்குழலாம்
காரிருளின் குடியிருப்பு;

மாமதுரைச் சிலையழகில்
　　வடித்தெடுத்த நாசிமலர் ;
தேமதுரக் கிண்ணியெனச்
　　சிரித்தவாய் ; செவ்விதழ்கள் :

பொற்கலைஞர் கைத்தொழில்கள்
　　புகுந்தறியா நற்செவிகள் ;
விற்புருவம் தான் வளைத்து
　　விழியம்பு பாய்ச்சி வந்தாள்.

வானத்திலே தோன்றும்
　　மணிவில்லும் கீழிறங்கி
மானிலத்து நடந்ததுவோ ?
　　வடிவுகொண்ட பேரெழிலோ ?

சேரன் திருநாட்டுச்
　　செல்வியரின் பொன்னிறத்தாள்
மாரனுக்கு வாய்த்த புது
　　வாளியெனத் தானசைந்தாள்.

செந்தாழம் பூமேனி
　　சேர்ந்தபெரும் பாக்கியத்தால்
கந்தைக்கும் ஓரழகு
　　கன்னியவள் தான் கொடுத்தாள்.

முல்லைப்பூ என்ற சொல்லால்
　　மோடி வித்தை உச்சரித்து
ஒல்லையிலென் னுளம்பற்றி
　　ஓடி மறைந்து விட்டாள்.

பூவொன்றும் வாங்கவில்லை ;
    பூவையுடன் பேசிடவே
நாவொன்றும் எழவில்லை ;
    நடுகல்லாய் நின்றிருந்தேன்.

சென்றவளை மீண்டுமினித்
    தெருவழியே காண்பேனே ?
வென்றவளை வென்றுள்ளம்
    மீட்டிங்கு வாழ்வேனே ?

செப்புத் தகட்டிற்குத்
    தேன்மலரைத் தருவதுபோல்
ஒப்பித்தன் உளமென்றன்
    உளத்திற்கா யீவாளோ ?

காவிரி

[குமரப் பருவத்திலே காவிரிக் கரையிலே நான் கழித்த நாட்கள் எத்தனையோ! ஒருநாள் மாலை வேளையிலே அங்கு செல்லாது போனாலும் பெரியதோர் ஏமாற்றமாக இருந்தது அப்பொழுது. தனித்தும் தோழர்களுடனும் சென்று ஏதேதோ இன்ப எண்ணக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருப்பது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தது.

பிற்காலத்தில் காவிரி யருகிலே யல்லாமல் வேறிடங்களிலே வாழ நேர்ந்ததால் இந்த வாய்ப்பு வெகு அரிதாகவே கிடைக்கும். பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் ஒருமுறை காவிரியருகில் தோழர்களின்றித் தனியாக உலாவ நேர்ந்தபோது எழுந்த எண்ணங்கள் இக் கவிதையில் உருவாகியுள்ளன.]

இளமைக் கனவுத்தேன்
    என்னுளத்தே பாய்ச்சிவிட்ட
வளமை சுரந்துவரும்
    வளர்வனப்புக் காவிரியே!

வெள்ளை மணற் பரப்பினிலும்
    விரியு மலர் மருங்கினிலும்
துள்ளு புனற் பாட்டினிலும்
    தோழருடன் நான்கழித்த

கனவெழுப்பும் சீரிளமைக்
    காலத்தை எண்ணி எண்ணி
மனங் குழைந்து நிற்கின்றேன்
    மறதியென்றும் கொண்டதில்லை.

மணற்கோட்டை எத்தனையோ
மனக்கோட்டை எத்தனையோ?
அணிற் பிள்ளை களைப்போல
ஆடல்களும் எத்தனையோ?

கன்னிக் கவின் மாறாத
காவிரிப் பூங் கவிப்பெண்ணே!
என்னென்ன நினைப்புகளோ
என்னென்ன ஆசைகளோ

கொள்ளத் துணைபுரிந்தாய்;
கூட்டின்பச் சுவையேறக்
கள்ளமிலா உள்ளங்கள்
கலந்திடவே நடம்புரிந்தாய்.

பத்துடனே ரைந்தாண்டு
பறந்துவிட்ட பின்னரின்று
கத்து குயிற் குழலிசையின்
களியோங்க நடக்கின்ற

உன்றனைநான் காணவந்தேன்;
உணர்ச்சியெலாம் மீண்டனவே.
அன்றுகண்ட குமரியடீ
அதிலொன்றும் ஐயமில்லை,

நந்தா எழில் அரசீ
நாணமுடன் உடல்வளைத்துச்
சிந்தா முறுவலுடன்
செல்கின்றாய் காவிரியே!

எண்ணமெலாம் கொண்டுவந்தாய்;
என்னிளமை கொண்டுவந்தாய்;
தண்ணமுதம் தனக்கு ருசி
தான்கொடுக்கும் தோழமையில்

கூடியவர் தமையெல்லாம்
கொண்டுவந்தா லாகாதோ?
வாடியிங்கு நான்தனியாய்
வருந்துவதைக் காணுயோ?

மூன்றுடலும் ஒருயிராய்
முடிந்தபெரு நட்பினுக்குச்
சான்றுனைப்போல் யாருண்டு?
சாய்பொழுதின் காலமெலாம்

முடிவில்லாப் பேச்சினிலும்
மோனஉளத் துடிப்பினிலும்
வடிகின்ற பேரன்பை
வரையாது பார்த்தாயே!

உன்னழகு நீண்டதுபோல்
உளத்துடிப்பும் நீண்டிருக்க
மன்னியவெம் பிரிவினில் நான்
மயங்குகின்றேன் காவிரியே.

கண்ணீர்

முத்தெனவே பிதுங்கிவரும்
        மோகனத்துக் கண்ணீரே
முத்தினுக்குங் கண்டறியா
        எத்தனையோ மதிப்புடையாய்
பைங்கிளிச்சொல் மங்கையரின்
        பாசுபதம் நீயலவோ?
அங்குனைத்தான் எதிர்த்துவெல
        ஆற்றல்மிகும் படையுண்டோ?
உள்ளத் துணர்ச்சிக்கோர்
        உருக்கொடுக்கும் நல்மணியே!
கள்ளவிழும் கோதையர்கள்
        கண்ணகத்தே வலிபெறுவாய்.
ஆடவர்கள் தங்கண்ணில்
        அனைவருக்கும் ஏளனம் நீ
வாடிநைந்த அடியாரின்
        வளர்பக்தி வெள்ளம் நீ
வஞ்சகத்தின் கண்களிலே
        மதிமயக்கும் நாடகம் நீ
பஞ்சையுளக் குழந்தையரை
        நெஞ்சணைக்கச் செய்வாய் நீ.
காதலியின் கண்களிலே
        கண்டுவிட்டால் உலகனைத்தும்

மோதிமிதித் தழித்திடுவேன்
முத்துதிரத் தான்சகியேன்
என்றுபல வீறுரைக்க
இளைஞர்களைத் தூண்டிடுவாய்
உன்றன் பெருமையெலாம்
ஓதிடவே சொல்லுண்டோ ?
வீரன் விழிகளிலே
வெட்கமிலாக் கோழைமை நீ
உறுதியெலாங் குலைத்திடுமோர்
ஒப்பிலாப் பெண்படை நீ
உள்ளத் துயரமெலாம்
ஒரு சேர்த்துத் தான் கரைத்து
மெள்ள வெளியேற்றும்
வித்தையறி பனிச்சொட்டே !
துன்பத்தின் கேணியிலும்
சுரந்திடுவாய் ; அன்றிமிகும்
இன்பத்தின் உச்சியிலும்
எங்கிருந்தோ தோன்றிடுவாய்;
மாயவித்தைக் கண்மணியே !
வற்றியறி யாஊற்றே
பாயுமருட் கருணையெனும்
பயிர்வளர்ப்பாய் வாழிய நீ !

கருக்கரிவாள்

கருக் கரிவாள் கைக் கொண்டே
கழனி செலும் இள நங்காய் !
அறுத்து விட்டாய் என் உளத்தை
அஞ்சனக் கண் வாளாலே ;

கபடமில்லா நேர் நோக்கால்
கனல் பாய்ச்சும் பெண் மானே,
உபமானம் ஒன்றில்லா
உயர்வதனப் பைங்கிளியே.

பூச் சூடியகொண்டை
புலன் ஐந்துந் தான் மயக்கப்
பாச்சான் கொடி இலேபோல்
பசுமை கொண்ட சிற்ருடைக்

கற்றைக் கொசுவமது
கலேந்தே சரிந்தாட,
ஒற்றை வடச் செம்பவளம்
உவந்தேறி ஆடிவரும்

அங்கி தனேக் கண்டறியா
அங்கலசம் சிறிதசையப்
பொங்கி வரும் இயல் அழகுப்
புன்னகையாய் போகின்ருய்....

எட்டிக் களை பறிக்கும்
    இடமெல்லாம் நிற்கேனோ ?
கட்டி மண்ணை நீ உடைக்கக்
    கைத்தடியாய் ஆகேனோ ?

ஏறுகின்ற வெயில் தணிக்க
    இன்னிழலாய்த் தழுவேனோ ?
மீறுகின்ற காதலுடன்
    மெல்ல மொழி பேசாயோ ?

கருக்கரிவாள்-ரம்பம் போன்ற வாயை உடைய அரிவாள்; நெல் முதலிய பயிர்களை அறுக்க உதவுவது.

பாச்சான் கொடி-ஒருவகைச் சிறுமரம் — பசுமையான கொடி போன்று அதன் இலை இருக்கும்.

இளமை

ஆடியெழும் நாகமதை அடிமிதிக்குங் காலம்
அளவில்லா உயர்எண்ணம் அனல் வீசுங் காலம்
தேடரிய கலையெல்லாம் நாடுகின்ற காலம்
தீஞ்சுவைசேர் கவிக்கனவில் சிறந்திருக்கும் காலம்

எண்ணவொண்ணு இடையூற்றை எதிர்த்து நிற்குங்
[காலம்
எட்டாத கொம்பெனினும் ஏறஎழுங் காலம்
கண்ணிமையில் மங்கைபணி காட்டுகின்ற போதே
காலனையும் நேர் நோக்கும் கட்டிளமைக் காலம்

வெற்றியெலாம் பற்றிக்கை வீசுகின்ற காலம்
விண்ணூடாய் உலகாக்க விரும்புகின்ற காலம்
பற்றவரும் தோல்விகளைப் பயமுறுத்துங் காலம்
பண்பெல்லாம் பொங்கிளமைத் திண்காலந்தானே

தாழ்வினையும் சூதினையும் தாங்கறியாக் காலம்
தலை நிமிர்ந்து தோள்புடைத்துச் சதுர்பேசுங்காலம்
வாழ்வினிலே சுசப்பேறு வளரிளமைக் காலம்
வாழியவோ வாழியதன் மாண்பெல்லாம் வாழி!

காதல்

கொன்றை அனல்பூத்துக் குயில்வாடுங் கார்காலம்
கன்றி உளம்நைந்து காதலர்தம் பிரிவஞ்சும்
இருளுக் கிருள்போர்த்த இறுதியிலா இரவொன்றில்
கருமை வளர்ந்துவரும் புரவி தனிலேறி
நான்போகும் வேகம் நளனுலு மாகாதே;
கான்யாறு தான்கடந்து காதலியின் வீடுசென்றேன்;
எல்லாரும் தூங்குகிறார், ஏதும் தடங்கலில்லை;
செல்லாமற் சென்றேன், தீங்குழலின் பேச்சுடைய
நங்கை உறங்கும் நல்லறைக்கு நேராக.
அங்கே எனக்காக அவள்காத்து நின்றிருந்தாள்;
கண்டேன் களிதுள்ளக் கட்டித் தழுவிடவே
செண்டாகத் தாவினேன்; கண்துயின்ற கட்டில்விட்டு
மெய்யாக வீழ்ந்தேன்; விழித்திட்டேன்—
ஐயோ, கனவே! ஆசையெல்லாம் பொடித்தாயே.

கொன்றை அனல்பூத்து — கொன்றை கார்காலத்திலே பூக்கிறது; அதன் பூ அனல்போல விளங்குகிறது.

நளனுலுமாகாது—வேகமாகக் குதிரையைச் செலுத்துவதில் நளன் புகழ்பெற்றவன்.

எதிர்பார்த்தல்

[பல நாட்களாக நாயகனைப்பிரிந்திருக்கிருள் ஒரு தலைவி. வேலையாக அவன் வெளியூர் சென்றிருக்கிருன். ஒருநாட் காலையிலே திரும்பி வருவதாக அவனிடமிருந்து சேதி கிடைக்கிறது. அந்த இன்ப நாளுக்கு முந்திய நாளிரவிலே தலைவிக்கு உறக்கம் கொள்ளவில்லை. முழு நிலா இரவெல்லாம் அவளை வருத்துகிறது. அந்நிலவையே நோக்கி நெட்டுயிர்த்து இரவைக் கழித்த தலைவி அதிகாலையிலே ஒளிகுன்றி மறையும் நிலவைப் பார்த்துக் கூறுவதாகக் கவிதை.]

மேனி வெளுத்து
  மறையும் நிலாவே,
நாளை யார் நின்செலவு
  இரவெலாம் நோக்குவார்?

உலகம் குளிர்வித்து
  என்னுளம் சுட்டாய்
செல்லுதி!

பொற்கிரணங்கள்
  கீழ்த்திசைப் படர்ந்தன;
நற்பொழுதோடு
  நாயகன் வருவரால்.

அதுவரா வெகுதூரம்

"குங்குமப் பொட்டணிந்து
கூடைதலை மேல்வைத்தே
பொங்கும்நகைப் பால்காரி
அங்கலசம் சிறிதசைய
எங்கோதான் செல்லுகின்றாய்
எனக்கறியக் கூறாயோ?"
"அதுவரா வெகுதூரம்
இதுநாளும் போயறியேன்."

"வார்த்தை மிகப்பொழிந்து
மன்பதையின் மனங்குழப்பிக்
கீர்த்திமலை ஏறிநிற்கும்
கீழ்மேல்நாட் டரசியலின்
மூர்த்திகளே நீர்நவிலும்
மோகனநா டெதுசொல்வீர்."
"அதுவரா எதுவென்றே
அறிவதற்கு நேரமெங்கே?"

"அண்டமுக டதன்மேலும்
அணுக்கருவின் உள்ளேயும்
கண்டறிந்த சேதிகளைக்
காட்டிவரும் விஞ்ஞானீ

மண்டியவுன் வலிப்பெருக்கால்
வகுத்தவின்ப நாடெதுவோ?"
"அதுவா வெகுதூரம்
ஆராய்ச்சிக் கெட்டவில்லை."

"வண்ணம் பலகுழைத்து
மனக்கனலைத் தீட்டியதில்
பண்ணும் பரதமுமாய்ப்
பரந்தஎழில் தான்கூட்டும்
எண்ணரிய ஓவியனே
எவ்வுலகம் நாடுகின்றாய்?"
"அதுவா வெகுதூரம்
இதுவரையும் காணேன்நான்."

"இன்பக் கனவையெல்லாம்
எழுத்தால் வடித்தெடுத்துத்
துன்பமெனும் சொல்லொழியத்
துணிந்துபெருங் கவிபுனையும்
அன்பனே நீநோக்கும்
அவ்வுலகம் எது சொல்வாய்?"
"அதுவா வெகுதூரம்
ஆர்வமுடன் தேடுகின்றேன்."

"வானவர்கள் தாமறியா
வாழ்வதனை எட்டிவிட
ஊனுடலை மிகவாட்டி
ஓங்குதவம் தான்புரிந்து

காணுறையும் முனியேநீ
　　கானவிழை நாடெதுவோ?"
"அதுவா வெகுதூரம்
　　நிதந்தேடி யலேகின்றேன்."

" அந்தமிலா தண்டங்கள்
　　ஆக்கியழித் தமையாதாய்
எந்தநல்ல திருவுலகை
　　எண்ணகத்தே கொண்டுள்ளாய்
முந்துமறைத் தனிமுதலே
　　மொழிந்தருள்க நானறிய "
" அதுவா இதுகாறும்
　　ஆகவில்லே என் படைப்பில்."

மறைந்த ஜோதி

1948 ஜனவரி 30 ஆம் தேதி. பாரதத்தின் தனிச் சோதியாக விளங்கிய காந்தியடிகள் ஒரு வெறிய னுடைய துப்பாக்கிக் குண்டால் வீழ்ந்தார். பாரதம் கலங்கித் துடித்தது. உலகமே கண்ணீர் வடித்தது.

பிப்ரவரி முதல் வாரத்தில் வெளியான 'காலச் சக்கரம்' என்ற பத்திரிகை இதழில் இப்பாடல் வெளி யாயிற்று.

சொல்லெங்கே சொல்லெங்கே
சொல்லவொணுத் துயரத்தைச்
சொல்ல வந்தேன் சொல்லெங்கே ?
சொல்லடங்காத் துன்பமந்தோ !

தூயவனே உத்தமனேச்
சுட்ட பெருங் கொடுமையினே
வாயுரைக்கத் தான்வருமோ ?
வார்த்தைகளும் நடுங்கினவே !

அந்தோ பேர் அநியாயம்
அவனிக்கோர் தனிச்சோதி
மங்கி யவிந்ததுவோ
மதியிழந்த பாதகனுல்.

பாரதத்தின் தனிப்பெருமை
பாருக்கோர் வழிகாட்டி ;
சீரிழந்த மக்களுக்குச்
சிந்தையிலே நல்விளக்கு ;

யாருக்கும் அன்புடமை
யாருக்கும் நல்லுறவு—
மார்பினிலே குண்டேறி
மாய்ந்திடவோ மாய்ந்திடவோ !

காந்தி மறைந்ததுவோ
காசினியின் கண் போச்சோ ?
ஏங்கித் தவித்திருந்த
இந்தியரைக் கரை சேர்த்த

ஓங்குபுகழ் மாலுமிதான்
ஓய்வெடுக்கச் சென்ருேே ?
பாங்கிழந்த பாரதத்தே
பணியெல்லாம் தீர்ந்ததுவோ ?

அன்பென்று பேசியங்கே
அன்ருெருவர் வந்திருந்தார்—
நெஞ்சினிலே ஆணியிட்டு
நீசர் வதைத்திட்டார்.

அன்பென்று சொல்லியிங்கே
அண்ணலிவன் இன்று வந்தான்—
நெஞ்சத்தில் ஈயமிட்டு
நிலைகெட்டோன் கொன்றிட்டான்.

புத்தனைப் போல் அன்புருவாய்
வாழ்ந்திருந்த புண்ணியனைச்
சித்தனைப்போல் பற்றற்றுச்
சேவை செய்த காந்தியினை

முத்தனைப் போல் ஆன்ம ஒளி
மூண்டு நின்ற மோகனனைச்
சத்துருவொன் றறியாத
சாதுவினை யிழந்தோமே !

புழுதியிலே தான்கிடந்து
புரண்டழுத மக்களையே
விழித்தெழுந்து தலை நிமிர்ந்து
மேன்மையுறச் செய்தவனைப்

பழியில்லா அறவழியால்
பாரதத்தை மீட்டவனை
இழந்தாயே எந்நாடே
இணையில்லாத் தந்தையினை !

பாருக்கு வழிகாட்டும்
பாரதமென் றேவுனைத்தான்
ஆருரைப்பார் இனிமேலே
அகலாத பழிகொண்டாய்.

வீரத்தின் விளக்கவிய
வெறியிங்கே தோன்றியதே !
தீராத கறையுனக்குச்
சேர்ந்ததுவே என் தாயே !

அன்பிற்கே உயிர் வாழ்ந்தான்
அன்பிற்கே உயிரீந்தான்
அன்புப் புதுச் சுடராய்
அகல் வானில் நின்றிடுவான் ;

என்றந்தக் குரல் கேட்போம்
இளஞ்சிரிப்பில் மகிழ்ந்திடுவோம்?
கன்றியுளம் நைந்தோம்
கதிகலங்கி வாடுகின்றோம் ;—

என்றாலும் சோதரரே
எண்ணம் துணிந்திடுவீர்
சிந்தை கலங்காதீர்
செயலற்று நிற்காதீர்;

தந்தையவன் சாவானே
சாவுமவனைத் தொடுமோ?
என்று மவன் வாழ்ந்திடுவான்
எம்மிடையே தங்கிடுவான்.

பொன்னுடல்தான் போயிடினும்
புகழுடம்பில் வளர்ந்திடுவான் ;
நூறாண்டு வாழ்ந்திடினும்
நூற்றிருபத் தைந்தெனினும்

மாறாவியற்கை யிது
மண்பாண்டம் வீழ்ந்திடுமால்—
நூறாண்டு சென்ற பின்னர்
நூறு மடங் கோங்கியவன்

மாறா இளமையுடன்
வாழ்ந்திருக்கக் காண்பீரே.
ஆதலினால் வாடாதீர்
ஆறிமனம் தேறிடுவீர்

சோதரரே காந்தியினைத்
தூய்மையுடன் நெஞ்சகத்தில்
வீற்றிருக்கச் செய்வீரே
மேலோன் உபதேசம்

காற்றுத் திசையினிலே
காதோடே போகாமல்
வாழ்க்கையிலே நல்லொளியாய்
வழிகாட்ட முன்னடவீர் ;

ஏழ்மையிலும் தாழ்மையிலும்
இன்பமிகுங் காலத்தும்
எக்காலும் கைக்கொள்வீர்
எங்கும் பரப்பிடுவீர்.

அறிவால் வளர்ந்தோங்கி
அணுவைப் படையாக்கும்
திறமாம் செருக்கினிலே
அன்புள்ளம் சிறுத்திட்ட

அவனிதான் அழியாமல்
அவன் வாழ்கே காத்திடுமால் ;
புவிமீதிற் சமத்துவ நற்
புதுவாழ்வை நாட்டிடுமால் ;

எண்ணத்திற் காந்தி மகான்
என்றும் மறையாமல்
திண்ணமாய்க் காத்திடவே
சேர்ந்திடுவீர் சோதரரே.

அன்பென்று பேசியங்கே அன்றொருவர் வந்திருந்தார்— அன்பு பேசிவந்தவர் இயேசுகிறிஸ்து.

நூற்றிருபத்தைந்தெனினும் — காந்தியடிகள் தாம் நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வாழப் போவதாகக் கூறிக்கொண்டிருந்தார். நூற்றைம்பது ஆண்டுகள் வாழ்வதாகவும் அவர் கூறியதுண்டு.

கவிதைச்சொல்

உள்ளத்திலே பல சமயங்களில் எத்தனையோ உயர்ந்த எண்ணங்கள் தோன்றுகின்றன. மக்களுடைய இன்பத்திற்கும் மேம்பாட்டிற்கும் அவை உகந்தவை. எல்லோருடைய உள்ளத்தையும கவருமாறு அவற்றையெல்லாம அழகான சொற்களாலான சிறந்த கவிதைகளாக வெளியிட முடியுமானால் எத்தனை நன்மை பயக்கும் !

உயர்ந்த எண்ணங்கள் உள்ளத்திலே எழுகின்றன— எப்படி ? உருவறியா ஓவியங்கள் போல ; பண்ணின் எழில் வீச்சுப்போல —கற்பனு சக்தி மிகுந்த இசைவாணன் ஒருவன் ஓர் இராகத்தை விரிவாக ஆலாபனம் செய்யும்போது அதன் சஞ்சாரத்தில் ஆங்காங்கே மின்னுகின்ற இராக பாவங்களைப் போல.

பைந்தருவின் நீழல்—பச்சைமரத்தின் அடியிலே நிழல். அந்த நிழலிலே ஒரு தண்மை இருக்கிறது. வெய்யிலில் வாடி வந்தவன் அது தருகின்ற இன்பததை உணருகிறான். ஆனால் அந்தத் தண்மை உருவில்லாது எங்கோ மறைந்து நிற்கிறது. அதுபோல.

எண்ணப் பெருங் குகையில் இருள் படிந்த மூலையிலே உயர்ந்த கருத்துக்கள் இப்படி உருவறியாது எழுகின்றன.

அஜந்தாக் குகை ஓவியங்கள் பல ஆண்டுகள் கணணிற்குப் புலப்படாது மறைந்திருந்தன. ஆனால் அவை இன்று உலகத்தையே கவருகின்றன. எண்ணங்கள் அவ்வாறு உருப்பெற்று வெளிப்பட்டுப் பலரையும கவரவேண்டும். அவற்றிற்கேற்ற கவிதைச் சொல் வேண்டும்.

பண்ணின் எழில் வீச்சில்
பளிச்சிடுமின் தோற்றம்போல்
பைந்தருவின் நீழலிலே
படிந்துள்ள தண்மையைப் போல்

எண்ணப் பெருங்குகையில்
இருள்படிந்த மூலையிலே
எழுந்தாடும் உருவறியா
ஓவியங்கள் எத்தனையோ !

வண்ணக் கருத்தும் உயர்
வாய்மைநிறை லட்சியமும்
வடிவில்லா தேங்கினவே
வாய்த்தசொலைக் காணமல்

மண்ணிற் குரம்ஊட்டும்
விண்ணமுதச் சொல்பெற்ருல்
மனச்சுடரை வடித்தெடுத்து
வைத்திடுவேன் கவிதையிலே

கண்ணிற் படா திருந்த
கலைமணியாம் அஜந்தாவின்
எண்ணரிய சித்திரம்போல்
எங்கும் ஒளி வீசிடுமே.

கவிக்கனல்

அம்புக்கு வில் சிறை. வில் அம்பைக் கட்டுப் படுத்துகிறது. வில்லைவிட்டு வெளியேறிய போது தான் அம்புக்கு விடுதலை. எண்ணங்களுக்கும், உள்ளக் கிளர்ச்சிகளுக்கும் சொல்லே சிறை. சொல்லையுங் கடந்து உள்ளத்தோடு உள்ளம் பேசுகின்ற உணர்ச்சித் துடிப்பிலே கவி சொல்ல ஆசை.

வில்லெனும் சிறைக் கட்டினை—நீங்கி
வேகங் கொண்டுபாய் அம்பு போல்
சொல்லையுங் கடந் தேகுமோர்—உள்ளத்
துடிப்பிலே கவி சொல்லுவேன்

மின்னல் ஜோதிகைக் கொண்டவன்—வெறும்
மேகக் குப்பையைத் தீண்டுமோ?
கன்னல் தேனினை உண்டவன்—அந்தக்
கசட்டுச் சக்கையை நாடுமோ?

வானப் பூக்களைக் காட்டியே—நல்ல
வையப் பூக்களை கூட்டியே
கானத் தீஞ்சுவை ஊட்டியே—வீசுங்
காற்றின் மூச்சினை நாட்டியே

சீறு நாகத் திரையினில்—கடல்
சேரும் நீலப் பரப்பினில்
ஆறு பாய்ந்திடும் ஓசையில்—மலையின்
அசைவிலாதகம் பீரத்தில்

கானப் பைம்மரப் பேச்சினில்—இளங்
கன்னிப் பேரெழில் வீச்சினில்
மோனப் பேரொலி தன்னிலே—நன்கு
மூட்டுவேன் கவிக் கனலையே.

வானப்பூக்கள்—வானிலே மின்னுகின்ற மீன்கள்.

சீறு நாகத் திரையினில்—நாகப்பாம்பு சீறிப் படமெடுத்து எழுகின்றதுபோல ஒலித்துச் சுருண்டு எழுகின்ற அலையில். மோனப் பேரொலி—பேச்சும், ஒலியும சாதிக்க முடியாததைப் பல சமயங்களில் மௌனம் சாதித்துவிடும். ஆகவே அந்த மோனத்தின் குரல் பேரொலியைவிடச் சிறந்ததாகும்.

பொங்கல்

பொங்கல் புதுநாள் வந்ததுபார்-எங்கும்
பொங்குக அன்பறம் இன்பமுமே !
இங்கெமை வருத்திய துன்பமெல்லாம்-இன்றே
ஏகிட இறைவனைத் தொழுதிடுவோம்

பொங்கொளி ஞாயிறும் எழுந்தனனே-அவன்
பொலிவினில் மாய்ந்திடும் பனிபோல
தங்கிய குறைகளும் சிறுமைகளும்-தலை
சாய்ந்தினி ஓடிடும் நிச்சயமே

செந்நெலும் கரும்பும் விளைந்தனவே-நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக-தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக

பிரிவுகள் பேசியே பூசலிட்ட-பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவோரும்
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம்-நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்

தமிழன் திருநாள் பொங்கலென்றால்-அதில்
தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?
புவியெலாம் சேர்ந்தொரு வீடதிலே-யாரும்
புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?

பொங்கல்

யாதும் ஊரெனச் சாற்றியதும்-மக்கள்
யாவரும் கேளிர் என்றதுவும்
மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர்-இன்று
வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?

பொங்கல் திருநாள் வந்ததுபார்-இனிப்
புன்மையும் பகையும் மாய்ந்தழிக
பொங்குக மங்களம் உலகெல்லாம்-எங்கும்
தங்குக அன்பும் அமைதியுமே.

*

அலைகள்

வெள்ளைக் குதிரையைப் போலே
துள்ளிக் குதித்திடும் அலையே
வேடிக்கை எத்தனை விந்தைகள் செய்கிறாய்
ஓடித் திரண்டு சுருண்டாய்—பின்
ஓங்கி எழுந்து புரண்டாய் (வெள்ளைக்)

புள்ளிக் கருநாகம் போலே
துள்ளிப் படமெடுக் கின்றாய்
போருக்குச் சென்றிடும் வீரப்படையென்னப்
பாருக் கணியணி யாக—முன்
பாய்ந்து பயங்கரம் செய்தாய் (வெள்ளைக்)

நீலப் பெருங்கடல் வேந்தன்
மேலுக் கெழுந்து கொதித்தே
நெற்றி சுருக்கவும் நீயுடன் தோன்றியே
வெற்றி முரசொலி தருவாய்—சிறு
மின்னல் அரவமும் புரிவாய் (வெள்ளைக்)

மல்லிகைப் பூவினைப் பறித்து
முல்லை மலருடன் தொடுத்து
வண்ணமாய் உன்முடி வைத்து நடமிட்டுப்
பண்ணும் குழைந்திட வந்தே—நிலப்
பாவைக் குச்சூடுகின் றாயோ? (வெள்ளைக்)

சாந்தி

எங்கள் இமயச் சிகரத் துயர்வில்
தங்கும் மோனத் தவமே சாந்தி
கங்கும் கரையும் அளவும் இல்லாக்
ககனப் பெருநல் வெளியே சாந்தி
பொங்கும் கடலிற் புதையும் நீலப்
பொலிவில் வதியும் ஒளியே சாந்தி
மங்கும் பொழுதில் வையம் தனிலே
வைகும் தனிமைத் தெளிவே சாந்தி
சாந்தி சாந்தி சாந்தி

முனிவோர் ஞானச் செறிவால் உணரும்
முடியா மறையின் முடிவே சாந்தி
பனிபோல் வாழ்வென் றரசும் தள்ளிப்
பதுமத் துறைவோன் வடிவே சாந்தி
நனிபே தையரால் அறையும் சிலுவை
தனிலே வளர்வோன் அருளே சாந்தி
கனிவால் முறுவல் தவழத் தூங்கும்
கபடில் மதலைத் திரளே சாந்தி
சாந்தி சாந்தி சாந்தி

விரிமென் மலரின் நிறைவே சாந்தி
வினைசேர் கலையின் உயிரே சாந்தி
உருகும் அன்போ டுயிர்கட் கென்றும்
புரியும் பணியின் விளைவே சாந்தி
அரிதிற் பெறுநல் லிறைவன் புகழ்சேர்
அடியின் கருணை நிழலே சாந்தி
திரையும் புனல்சூழ் உலகந் தனிலே
பரவும் படியாய்ப் புரிவோம் சாந்தி
சாந்தி சாந்தி சாந்தி

பதுமத் துறைவோன் - புத்தன்.

பதில்

வானில் தனித்திலங்கும் வண்ணப் பிறைபோல்
வளரும் அழகுடைய மங்கை நல்லாளே
ஏனிந்தக் காதலென்மேல் என்று கேட்கிறாய்
ஏதும் பதிலறியா தேங்குகின்றேன் நான்.

மாலை இளவெயிலில் சோலை தனிலே
வந்ததும் கண்டதும் காதல் கொண்டதும்
மேலும் அது வளரும் காரணத்தையும்
விளம்ப வகையுமுண்டோ மின்னற்கொடியே ?

வீணை நரம்பினிற்கும் மெல்லிசைக்குமே
விரியும் தொடர்புசொல வாசக முண்டோ ?
தேனை அகத்துள் வைத்த செவ்வி மலர்க்கும்
தினகர னுக்கும் உள்ள காந்தம் என்னவோ ?

சோர்விற் சுழலுகின்ற கண்கள் தமக்கும்
தூக்கம் அதற்கு மென்ன சொந்தம் சொல்லு [வாய் ?
ஆர்வமுடன் மகவின் கூவல் கேட்டதும்
அம்மம் சுரக்கும் வகை யாரறிவாரோ ?

ஓடும் புனல் தனக்கும் ஓங்கும் ஓதைக்கும்
உற்ற பொருத்தமதை ஓதலாகுமோ ?
நாடி உனை நினைந்தே வாடுகின்றேனே
நல்ல மொழி எனக்குச் சொல்லிடு வாயே.

தோற்றம்

தேனிலா ஊறுகின்ற சேல்விழிகள் யான் கண்டேன்
வேனிலான் வில் போன்ற மென்புருவச் சீர்கண்டேன்
புன்சிரிப்புப் புதுரோஜாப் பூத்திருக்கும் எழில்
[கண்டேன்
கன்னக் குழிக்கவிதை கண்டு களிகொண்டேன்
மதனன் குடியிருக்கும் மார்புகண்டேன் சென்றணைக்க
அதிவிரைவிற் பாய்ந்தெழுந்தேன் அடாடாநான்
[கண் விழித்தேன்.

பிரார்த்தனை

கருணை வாரிதியே கறைமிடற் றண்ணலே
திருவருட் கென்றன் சிறுவிண் ணப்பம் :—
இப்பிறப் பதனிலோ எப்பிறப் பதனிலோ
தப்பிநா னிழைத்த தவறுகள் எல்லாம்
இன்றெனைச் சூழ்ந்துபே ரிடருற நகைத்து
நின்றன ; அதனால் நெஞ்சம் முறிந்தேன்,
மணமுடிந் தின்றுதான் மாதம்ஏ ழாயின,
கணவருக் கென்மேல் கடுகத் தனையும்
அன்பிலை ; ஆனால் அவர்மே லிழுக்கிலை.
தந்தைதாய் செய்த தொந்தரவதனால்....
பெற்றவர் மகிழவே பெண்எனைக் கொண்டனர்.
மற்றிதை யறிந்தும், மனம் அவர் கனிந்து
காலக் கழிவினில் காதலென் மேற்கொளச்
சாலவும் முயன்றேன் ; தளர்விலா தவர்க்கு
உகந்தன எல்லாம் ஓதுமுன் செய்தேன் ;
அகமலர்ந் தவரும் அடிமையை நோக்கிட
அருளுவா யென்றுனை அனுதினந் தொழுதேன் ;
பெருகுமென் வினையால் பேதமே விளைந்தது.
ஒருகணம் எனையவர் உற்றுநோக் கிடினும்,
மறுகணம் உயிர்த்து வெறுவெளி நோக்குவார் ;
உளத்தினில் அழுந்தியே உருகிநின் றிடுவார்.—
சுளித்தெனைப் பார்த்துச் சுடுசொல் கூறினும்,
கெஞ்சிய வார்த்தையால் நெஞ்சிற் படர்ந்த
விஞ்சிய வருத்தம் விலக்கிட முயலலாம் ;
மனப்பண் புடையாமல் வாய்விட் டுரையார் ;
புனப்புழுப் புகுந்த போதினைப் போலவே

அகந்துயர் உண்டிட அவலமே ஆயினுர்
திகழொளி வதனமும் சீர்குலைந் திட்டார் ;
நெற்றியில் வந்ததே ஒற்றைக் கீறலும் ;
சுற்றியென் உளத்தினில் சுவைத்திடு நகையும்
இழந்தனர். அந்தோ ! இறைவனே இவற்ருல்
உழந்துநா னிருக்க உற்றதோர் பேரிடி—
சென்றதோர்இரவினில் சிறிதும்துயில்கொளாது
என்றனுழ் வினையினை எண்ணியே கிடந்தேன் ;
தூங்கினர் கணவர் சோர்வுடன் ; அறியாது
ஆங்கொரு மொழிதான் அவர்வாய்ப் பிறந்தது ;
‘ இவளால் என்றன் இன்பந் துறந்தேன் ;
கமலா, உன்றன் காதலும் இழந்தேன் ’
என்றனர் ஐயகோ இதயம் வெடித்திட.
பொன்றின உளத்துள் பொதிந்தஎன்
[கனவெலாம்
என்னநான் செயினும் என்பால் அவர்க்கு
மன்னிய காதல் வரஇனி வழியிலை ;
வேற்ருெரு மங்கையை விரும்பியே என்பதி
ஆற்ருெணு ஏக்கத் தழுந்தினர் அறிந்தேன்.
நாதன்நல் லின்பமே நங்கையற் கின்பமாம் ;
பேதைநான் அவர்க்குப் பீடையாய் வந்துளேன்.
இறந்தனன் எனினும் இரண்டாந் தாரமாய்
மறந்தறி யாதஅம் மங்கையை மணப்பர்.
இனியெனக் குலகினில் என்னிருக் கின்றது ?
பனிமதிச் சடையீர் பரிவுடன் ஏழையை
இணையடி மலர்களில் ஏற்றருள் வீரே ;
கணவர்நற் சுகந்தனில் களித்திடச் செய்வீர் ;
இன்னுமோர் பிறவி இருந்திடில்,
என்னுடை நாதனே டினிதுறப் புரிகவே.

சத்தியம்

சத்தியம் செத்ததோ
தர்மம்ஒளி மங்கிற்ரு
உத்தம னெம் காந்தி மகான்
நெஞ்சத்தின் உதிரமது
இத்தரையில் பட்டவுடன்
என்றும் நிலைத்திருக்கும்
சத்தியம் செத்ததோ
தர்மம்ஒளி மங்கிற்ரு ?
சத்தியத்தின் சோதனையில்
தர்மநெறி அன்பஹிம்சை
பக்தியுடன் காத்துநின்ற
உத்தமனெம் காந்தி மகா
நெஞ்சத்தே குண்டேறி
நினைவிழந்த அக்கணத்தே
சத்தியம் செத்ததோ
தர்மம் ஒளி மங்கிற்ரு ?
கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமிட்டு பாரதத்தாய்
கைத்தளையைக் களைந்தெறிந்த
அத்தனவன் திருமார்பில்
அறிவிழந்தான் சுட்டவுடன்
ஆராமா எனும்போதே

சத்தியம்

சத்தியம் செத்ததோ
    தர்மம்ஒளி மங்கிற்றோ ?
சத்தியத்தைக் கடைப் பிடித்தார்
    காந்தியெனல் சரியல்ல
சத்தியமே காந்திமகான்
    சத்தியமே அவர் வாழ்க்கை
சத்தியமே அவர் வடிவம்
    தரணிக்கோர் புதுச்சோதி
பித்தனொரு பேதையினால்
    பிணமாகச் சாய்ந்தவுடன்
சத்தியம் செத்ததோ
    தர்மம் ஒளி மங்கிற்றோ ?
எத்தனையோ துன்பங்கள்
    எத்தனையோ சிறைக்கூடம்
இத்தேச விடுதலைக்காய்
    எமதண்ணல் தாம் சகித்தார்
தாய்நாட்டின் பக்தியிலே
    தலைசிறந்தார் என்றாலும்
தாய்நாடோ சத்தியமோ
    சத்தியமோ தாய்நாடோ
எதுவேண்டும் எனக்கேட்டால்
    இமைப்போதும் தயங்காமல்
சத்தியமே வேண்டு மென்பார்
    சாந்தமுனி காந்திமகான்
வையத்தே அன்பாட்சி
    வளர்க்கவந்த மெய்ஞானி

மார்பகத்தே குருதி சிந்த
மறைந்திட்டார் என்று சொன்னால்
சத்தியம் செத்ததோ
தர்மம் ஒளி மங்கிற்றோ ?
இத்தரணி யென்னாளும்
ஈடேறி உய்யாதோ ?
சத்தியந்தான் வெல்லாதோ
தர்மநெறி ஓங்காதோ ?
என்று மனம் சோர்ந்தேன்
இருள்கூடி நெஞ்சுடைந்தேன்—
அத்தப் பொழுதினிலே
அகக் கண்ணின் முன்பாக
உன்னதமாம் லட்சியத்திற்
குயிரீந்த மேலோரின்
மன்னுபுகழ் வடிவெல்லாம்
வந்தனவே ஒளிமயமாய் ;
எல்லோர்க்கும் நடுநிலையாய்
இயேசுமுனி அன்புருவம்
கல்லும் கரைந்துருகும்
கருணை ஒளி கண்டிட்டேன் ;
அன்பென்று பேசி வந்த
அவர் நெஞ்சில் ஆணியிட்டுத்
துன்மதியோர் கொன்றிட்டார்
தூயமகான் மறைந்தாரோ
ஏசுமுனி மாய்ந்தாரோ
இல்லை யில்லை நாமறிவோம்

4

வீசுபுகழ் பொங்கியெழ
மேதினியில் ஓங்கிநின்றார்
புத்தனுக்குத் தம்பியவர்
பொன்னடியைப் பின்பற்றி
மெத்தக் கருணையினால்
மீண்டும் வந்த தம்பியிவர்
காந்தி மகான் சாவாரோ
காலனவரைத் தொடுமோ ?
சாந்தமுனி சாகவில்லை
சத்தியமும் சாகாது ;
ஒருடலில் கட்டுண்டு
உலவி வந்த மெய்ச்சுடர்தான்
சீருடனே மாந்தர்களின்
சிந்தையெலாம் நிறைந்ததுவே.
காயமிது சத்தியமோ
காந்தி யொன்றே சத்தியமே.
காயமைந்து பூதத்தில்
கலந்து மறைந்திடவும்
காந்தியெனும் சத்தியந்தான்
காரீயக் குண்டேறிச்
சிந்துங் குருதியினால்
சிரஞ்சீவி யாயிற்றே.
ஆண்டொருநூற் றைம்பதிந்த
அவனியிலே வாழ்வனென்றார்
ஆண்டுக் கணக்குகளை
அழித்துலகம் உள்ளவரை

வாழ வளர்ந்து விட்டார்
வாழியவோ சத்தியமே.
ஆழநினைந் தாலடிகள்
அவனி உய்ய வந்தவராம்
பாரதத்தின் விலங்ககற்றும்
பணியவற்குப் பெரிதல்ல ;
பாரினிலோர் புதுநெறியைப்
பரப்பிடவே காந்தி வந்தார்.
அறிவுத் திறமோங்கி
அழிவுக்கே படை செய்யும்
நெறியறியாப் பூமியிலே
நேர்மையன்பு குன்றியதால்
மனிதப் பெருஞ்சாதி
மாய்ந்தழிந்து போகாமல்
புனிதனிங்கு சத்தியத்தின்
புன்னகையாம் அன்பஹிம்சை
மார்க்கத்தைக் காட்ட வந்த
மகாத்மாவென் றறிவீரே.
ஓர்ந்துணர்ந்து வாழ்விலவன்
உபதேசம் கொள்ளாமல்
அணுவைப் பிளந்திடுவோம்
அழிப்போம் பகைவர்களை
எனப் பேசி இறுமாந்தால்
இவ்வுலகம் நாசமுறும் ;
மாற்றலரை மாய்க்கு முன்னர்
மாநிலமே வீழ்ந்திடுமால்.

கூற்றுவனும் அணுப்படையைக்
 கொண்டுகளிப் பெய்தாதீர்
மானிடப்பேர் துடைக்க வந்த
 மாயமெனத் தானறிவீர்
வீணுய் அழியாதீர்
 மேதினியீர் என்றன்பால்
எச்சரிக்கை செய்ய வந்தார்
 இன்பமுற நெறி சொன்னுர்.
சத்தியத்தின் சோதியவர்
 தனிவழியைப் பின்பற்றி
இன்புற் றிருந்திடுவீர்
 இவ்வுலகம் ஒருவீடே ;
துன்பமில்லை போரில்லை
 சோதரரே அனைவோரும் ;
விண்ணின்பம் பெற்றிடலாம்
 விரிந்த உளப் பான்மையுடன்
கண்விழித்து நோக்கிடுவீர்
 காந்தியுகம் தோன்றியதே.

வாழ்க காந்தி

குறிப்பு: காந்திமகானின் பொன்னுடம்பு மறையுமுன்பு நடந்த காந்தி ஜயந்தி விழாவொன்றில் பாடியது.

அன்புடன் அறமும் ஆட்சி
அவனியில் புரியுமாகில்
மன்பதை இன்ப மெய்தும்
வானவர் வாழ்க்கை கூடும்
என்பதோர் உண்மை தன்னை
இயம்பிய புத்தன் ஏசு
வன்பெரு மரபில் வந்த
மகாத்மனும் காந்தி வாழ்க!

சத்தியம் என்றும் ஓங்கும்
தர்மமே முடிவில் வெல்லும்
கத்தியும் வாளுந்தள்ளிக்
கருத்தினில் அஹிம்சைபூண்டு
அத்தனைப் பணிந்து வாழ்வீர்
அல்லலிங் கில்லை என்று
தத்தளித் தமரில் நைந்த
தாரணிக் குய்வு சொன்னாய்

சக்கரம் அன்னாட் கையில்
சமர்செயக் கீதம் பாடும்
சக்கரம் இன்றுன் கையில்
சாந்தியின் கீதம் பாடும்

வாழ்க காந்தி

தக்கதோர் நெறியை அன்பால்
சமயத்திற் குகந்தவாறு
மக்களுக் களிக்கவந்த
மகாத்மா நீ வாழ்க வாழ்க!

வெறுப்பினை அன்பால்வெல்லும்
விதந்தனை வகுத்தாய் உள்ளச்
செருக்கினை அடக்கந் தன்னால்
ஜெயித்திடும் வாழ்வு கொண்டாய்
நெருப்பினைக் கக்கும் வெஞ்சொல்
நேரலார் பகைமை யெல்லாம்
சிரிப்பினால் மறையச் செய்யும்
தீரனீ! காந்தி! வாழ்க!

அறிவினைப் பெற்று மாந்தர்
அறவினை துறந்திந்நாளில்
மறவினை எண்ணி வையம்
மாய்ந்திடப் படைகள் கண்டார்
வெறியினைப்போக்கி மேலாம்
மெய்ந்நெறி காட்ட வந்த
பொறைதயை அஹிம்சை அன்பாம்
பொன்மொழிக் காந்தி! வாழ்க!

கிருஷ்ணன் கையில் சுழன்ற சக்கரம் அன்று சமர் செய்ய ஒலித்தது: இன்று காந்தி மகான் கையில் சுற்றுகிற ராட்டைச் சக்கரம் சாந்தியின் கீதம் பாடுகிறது.

இருளும் ஒளியும்

சூரியன் உலகிற் பாதியை ஆள்கின்றான்
இரவரசி மறு பாதியை ஆள்கின்றாள்
அவள் அவன் காதலி
வைகறையில் இரவரசி ஒளியிற் கலக்கின்றாள்
ஞாயிறு அன்புடன் நீட்டிய கைகளில் மறைகின்றாள்
மாலையில் ஒளியிலே இருள் காண்கிறது
காலையில் இருளில் ஒளி காண்கிறது
இரவரசி குளிர்ச்சி தருகின்றாள்
பரிதி வெப்பம் தருகின்றான்
இருவரும் உயிர்களைக் காக்கின்றனர்
இரவு கறுப்பு; தண்மையை உடையவள்
பராசக்தி.
ஞாயிறு சிவப்பு; வெம்மையை உடையவன்;
சிவன்.
பாரசக்தி பாதி, சிவன் பாதி—
ஒருவரில்லாவிட்டாலும் உலகம் அழியும்
இரவு சலித்த உயிர்களின் சோகம் தவிர்க்கின்றாள்
உறங்க வைக்கின்றாள்
கரும் போர்வையை உலகின்மீது போர்த்துகின்றாள்
அவள் உலகத்தின் தாய்
பராசக்தி.
சூரியன் உயிர் கொடுக்கின்றான்
ஒளி கொடுக்கின்றான்
காய்கின்றான்
அவன் தந்தை
சிவன்.

இருளும் ஒளியும்

கதிரவனும் இருளரசியும்
எப்பொழுதும் பிரிவதே யில்லை
எப்பொழுதும் தோள் கோத்துக் கொண்டிருக்
[கிறார்கள்
எப்பொழுதும் முத்தமிட்டுக் கொண்டிக்கிறார்கள்
உலகத்தைச் சுற்றிப் பவனி வருகிறார்கள்
இரவுப் பக்கம் நின்றால் ஞாயிறு தெரிவதில்லை
ஞாயிற்றின் பக்கம் நின்றால் இரவைக் காணோம்
ஆனால் அவர்கள் தழுவிக்கொண்டே யிருக்கிறார்கள்
அவர்களை வாழ்த்துகிறேன்!

இருவரில் யார் முன்னே செல்லுகிறார்கள்?
விண் மீன்களை அணிந்துகொண்டு, பிறைப் பொட்
இரவு முன்னே செல்லுகின்றாளா? [டிட்டு
பறவைகள் பாடவும், உயிர்கள் ஓடியாடித் திரியவும்
ஞாயிறு முன் செல்கின்றானா?

காலையில்
இரவு கதிரவனை எதிர்கொண்டழைக்கின்றாள்
கதிரவன் சிரித்து வருகின்றான்

மாலையில்
சிவந்த மேகப் பட்டாடை உடுத்து
இருள் கதிரவனைப் பின் தொடர்ந்து நடக்கின்றாள்
அவள் உடையில் பொற் சரிகைகள், பொற்கரைகள்
மின்னுகின்றன.
கதிரவன் சிரித்துக்கொண்டு முன்னால் போகிறான்
அவர்கள் பிரிந்தார்களா?
இல்லவே இல்லை
உலகந்தான் அப்படி எண்ணிய மயங்குகிறது

கதிரவன் வாழ்க
இரவரசி வாழ்க

அன்பே
நீ உனது அன்புக் கதிர்களை நீட்டினாய்
நான் உன்னுள் மறைந்து விட்டேன்
உன்னுள் நான்
என்னுள் நீ
உலகம் இதைக் காணமுடியாது
உன்னை ஒருபுறத்திலும் என்னை ஒரு புறத்திலுமே [காண்கிறது
ஆனால்
ஞாயிறும் இருளும் போல
நாம் ஒன்றாகவே இருக்கிறோம்

குறிப்பு: காதலால் தூண்டப்பெற்ற உள்ளம் என்னவெல்லாம் கற்பனை செய்து கொள்ளுகிறது! அதன் கற்பனைக்கும் குமுறலுக்கும் ஓய்வுண்டா? எல்லைதானுண்டா? நவநவமாய்க் கற்பனைகள்! நவநவமாய்க் குமுறல்கள்!

பிரிவேற்படும்போது வாடித் துடிக்கிறார்கள் காதலர்கள். பிரிவால் அவர்களுக்கு உலகமே சூனியமாகி விடுகிறது. ஆனால் ஒவ்வொரு சமயத்திலே பிரிவிலும் தாங்கள் ஒன்றாக இருப்பதாகவே அவர்கள் உள்ளத்தில கற்பனை எழுகின்றது இயற்கைக் காட்சிகள் அந்தக் கற்பனைக்குத் துணைபுரிகின்றன

பிரிவால் நலிந்த ஒரு காதலி காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் கதிரவனையும இருளையும் கவனிக்கிறாள் காலையிலே கதிரவனை வரவேற்று அவன் மேலே எழுந்து வரவரப் பின் வாங்குகிறாள் இருளரசி, மாலையிலே இருள் முன்னேறக் கதிரவன் மெதுவாக மறைகின்றான். ஒளியுள்ள போது இருளில்லை; இருளுள்ளபோது ஒளியில்லை என்று பொதுவாக உலகம் எண்ணினாலும், கதிரவனும் இருளரசியும் உலகைச் சுற்றிப் பவனி வரும்போது அவர்கள் ஒருவரையொருவர் பிரியாது தழுவிக்கொண்டேஇருப்பதாகத் தோன்றுகிறது. காலைக் காடசியும் மாலைக் காட்சியும் இந்த எணணத்திற்கு வலிமை தருகின்றன பிரிவால் வாடும் அவளுக்கு இந்த எண்ணம் மகிழ்ச்சியளிக்கிறது. அது காதலனுக்கு ஒரு கடிதமாக உருவெடுக்கிறது.

அறிவாய் நீ

காட்சி

மலர்ந்தது முழுநிலா
எங்கே?
நீலக் கடலருகே நீண்டதொரு நிலாமுற்றம்
அங்கே.
சுருளும் அலைசெய்யும் அரவக் குழைவினிலே
இருவர் உயிர்கலந்த எல்லையிலாக் காதலிலே
இனித்தூறும் அன்புச்சொல் இன்னமுது பருகை
[யிலே
முருகன் மறைந்து நின்று முடித்துவிட்ட நட்பினிலே
விரிந்ததந்த வானப்பூ.
நெஞ்சமொன்ருய் உயிர் ஒன்ருய்
நிலாமுற்றம் வீற்றிருந்து
தேன்பேச்சும் பேச்சில்லா மோனத் தெளிவுரையும்
கேட்டுவந்த முழுநிலவு மீட்டுமிங்கு பன்முறையும்
வந்துவந்து மறைந்திடவும் வாடிநின்றேன்—
இன்றுமிங்கு சிரித்தந்த வெண்ணிலவு
வந்து தழைத்ததுவே—அது என் வார்த்தைக்
[கிரங்காதோ?

வேண்டல்

வானத்துப் பொன் விளக்கே
(அன்று நீ என்)
வார்த்தையெலாங் கேட்டாயே
நெஞ்சிற் கிளுகிளுத்த நினைவெல்லாம் உணர்ந்தாயே

மொழியறியா ஆசையெலாம் முகச்சுளிவில் கண்
[டாயே
பேச்சுக்கும் எட்டாத பேரன்பைத் தெரிந்தாயே
கண்டதெலாம் இன்று கனிந்துரைக்க மாட்டாயோ?
நினைவெல்லாம் அங்குசென்று நீ மொழியக்
ஏழையிந்தப் பேதைநெஞ்சம் [கூடாதோ?
இன்றும் அன்று போலவேதான்
வெம்பித் துடிப்பதை நீ விளம்பிவிட்டா லாகாதோ?
இருளுக்கு எழில் கொடுக்க இன்பமுடன் வந்தாயே
பிரிவுத் துயர் களையப் பேசிவிட்டா லாகாதோ?
இளமைக் கொதிப்பெல்லாம் என்னைக் குலுக்குதிங்கே
நெஞ்சத்தினில் துடிப்பு நின்றிருக்கும் எல்லைவரை
கொஞ்சமுமே குறையாது கூடிப் பெருகிவரும்-
என்னை யறிந்தோனொருவன் இருக்கின்றான்
[என்பதனால்
வாழ்கின்றேன் இந்த வாசகமும் பொய்யாமோ?
நீயிந்தப்பேச்செல்லாம் நிச்சயமாய்ச் சொல்லிடுவாய்
அன்று மிருந்தாய் நீ அறிவாய் நீ எல்லாமும்
உள்ளத் துணர்ச்சியெல்லாம் உள்ளபடி கூறிவிடு
அதன் பின்னர் எப்படியோ ஆனபடி ஆகட்டும்.

அன்னை கையின்

1

அன்னை கையின் விலங்ககன்ற
அருமை நாளும் வந்தது;
ஆடிப்பாடி வாழ்க வென்று
அண்ட மெட்ட ஓதுவோம்.
பொன்னின் மகுடம் இந்தியத்தாய்
புனைந்த நாளும் வந்தது
போற்றிப் பாடி ஜெய் ஹிந் தென்று
பூமி யதிர முழங்குவோம்.

2

பாரதத்தின் சிறுமை யெல்லாம்
பஞ்சு போலப் பறந்ததே;
பாருக் கெல்லாம் கண்ணிதென்று
பகரும்நாளும் வந்ததே.
வீர தீரம் அன்பு ஞானம்
மிகுந் திருக்கும் மக்கள் யாம்
மெய்ம்மை நூல்கள் பலவுங் கண்ட
மேலோர் வழியில் வந்தவர்.

3

அடிமை வாழ்வில் நொந்த போது
ஆன சிறுமைக் குறையெலாம்
அகல வென்று திறமையோடு
அற்புதங்கள் ஆற்றுவோம்.

மிடிமை கொன்று கொடுமை நீக்கி
வேந்தர் போல வாழுவோம்;
விந்தை யென்றே உலகம் போற்ற
மேன்மை யாவும் காணுவோம்;

4

மனிதர் யார்க்கும் பொதுநல் நீதி
வாழ்க்கை இன்பம் பொதுவிலே;
மனிதர் யார்க்கும் பொதுநல் உடமை
வழங்கி யன்பு கூட்டுவோம்;
கணித ஞானம் கலைகள் ஞானம்
கவிதை ஞானம் ஓங்கவே
கடவுள் என்னும் உலகின் சக்தி
காணும் ஞானம் ஓங்கவே

5

செயல் பெருக்கி மயல் கருக்கித்
தீமை போக்கி வாழுவோம்;
சிந்தை விரிவில் தோன்றுங் கனவைச்
செய்து காட்டி மகிழுவோம்;
புயல் வெடித்த காடு போலப்
புன்மை வீழச் சாடுவோம்;
புனிதபார தத்தை யென்றும்
போற்றி ஒன்றுய்க் கூடுவோம்.

ஜேய் ஹிந்த்

பல்லவி

ஜேய் ஹிந்த் ஜேய் ஹிந்த்
ஜெய ஜெய ஜேய் ஹிந்த்!

சரணம்

அடியடா முரசம்
ஆர்த்தெழுந் தாடடா
அன்னை கை விலங்குகள்
அகன்றன காணாய் —ஜேய் ஹிந்த்

இன்னுயிர் தந்தவள்
ஏக்கமுந் தீர்ந்தே
புன்னகை புரிந்தாள்
பொன்முடி சூடினாள் —ஜேய் ஹிந்த்

சிறுமைகள் மாய்ந்தன
சீரெலாம் பெருகிடும்
வறுமையில் வாடிய
மக்களும் ஓங்குவார் —ஜேய் ஹிந்த்

இன்பமும் அன்பும்
எங்குமே பொங்கிட
அன்னையெம் பாரதி
அறம் வளர்த்த திடுவாள்-ஜேய்ஹிந்த்

அனைவரும் சோதரர்
அவனியோர் வீடாம்
எனும்நெறி காட்டுவாள்
யாவரும் வாழவே —ஜெய் ஹிந்த்

வாழியெம் மன்னை
வாழிய உலகம்
வாழிய அன்பறம்
வாழிய வாழிய —ஜெய் ஹிந்த்

குறிப்பு: பாரதநாடு சுதந்திரம் பெற்ற நாளன்று பாடியது.

நாணம்

நேற்றும் தயங்கினேன் இற்றைநாள் திண்ணமாய்
உள்ளந் திறந்தென் அன்பெலா முரைப்பேன்
என்றே நாள்தொறும் நாளெலாம் எண்ணியும்
அந்தியிற் காதலர் வந்திடுந் தருணம்
மொழியறியாது மூங்கையாய்
குழல்வளை திருத்தி நிற்கிறேன் தோழி.

மேலே பற

மனமே,
கற்பனைச் சிறகுகளை விரித்து வானிலே பற!
மேமே மேலே பற!
இன்னும் மேலே பற!
விண்ணிலேயுள்ள அமுதத்தை மண்ணுக்குக் கொண்டுவா.
வாழ்க்கையின் குறுகிய பாதையிலே உழன்று கீழ் நோக்கி நில்லாதே.
உனது கனவுக் கண்களின் பரந்த நோக்கமே உலகத்தின் உய்வு.
உனது பார்வை மேல் நோக்கியே விரியட்டும்.
நீல விசும்பிலே கழுகு பறக்கிறது ; ஆனால் அதன் பார்வையெல்லாம் நிலத்திலேதான்.
கழுகுப் பார்வை உனக்கு வேண்டா.
மேலே நிமிர்ந்து பார்.
கழுகாகிலும் வானிலே பறக்கிறது.
மண்ணுக்குக் கீழே சேற்றிலே நெளிகிறது புழு.
பார்வையெல்லாம் சேற்றிலே ; வாழ்க்கையெல்லாம் சேற்றிலே.
புழுவுக்குக் கழுகுமேல்.
நீ புழுவாகாதே ; கழுகும் ஆகாதே.
அப்பாலுக்கும் அப்பாலே உயர்ந்து செல்.
இன்பமெல்லாம் கொண்டுவா.
எனக்கு எனக்கு என்று பேசாதே.
எல்லாம் எல்லோருக்கும்—
இன்பமே எண்ணுவாய்; அன்பே எண்ணுவாய்.
மனமே, கற்பனைச் சிறகுகளை விரித்து உயர்ந்து பற.
மேலே மேலே உயர்ந்து பற.

சுதந்திரத் திருநாள்

சுதந்திரத் திருநாள் வந்ததடா—அடிமைத்
துன்பம் மறைந்த நாள் வந்ததடா
அதிர முழக்கிமுர சார்த்திடுவோம்—நமது
அன்னையை வாழ்த்தியே பாடிடுவோம்.

இத்தனை நாளடிமைப் பட்டதனால்—இங்கே
எத்தனையோ சிறுமை தோன்றினவே ;
அத்தனையும் தொலையச் செய்திடுவோம்—தேசம்
புத்துயிர் தாங்கவே பணிபுரிவோம்.

விடுதலை வந்ததும் இன்பமெலாம்—உடனே
மேவிடும் என்பது வீண்கனவாம் ;
திடமுடன் ஆற்றிடும் செயல்களினால்—புன்மை
தீர்ந்துநற் சுகமெலாம் சேர்த்திடுவோம்.

பஞ்சமும் நோய்களும் பேதமையும் இன்னும்
பாரத நாட்டினில் இருந்திடவோ ?
வஞ்சமும் சூதுபொய் மாண்டிடவும்—அறிவு
வாய்ந்துநா மனைவரும் வாழ்ந்திடவும்

கலைமணம் எங்கணும் வீசிடவும்—உயர்
காதல்வாழ் வன்பறம் கூடிடவும்
தலைநிமிர்ந் தனைவரும் நின்றிடவும்—நல்ல
சமத்துவ வாழ்வினை நாட்டிடவும்

அரியதாம் செயல்பல முனைந்திடுவோம்—இதை
அமரர்தம் லோகமாய் மாற்றிடுவோம்.
பெருமைகள் சேர்ப்பதே சுதந்திரம்நாம்—இன்று
பெற்றதன் நோக்கமென் றுணர்ந்திடுவோம்.

விலையில்லா மாணிக்கம்

விலையில்லா மாணிக்கம் வேந்தர்களும் வாங்கரிதாம்
அலைகடலால் ஈன்றெடுக்கா அழகுவளர் ஆணிமுத்து
முகலாயப் பேரரசர் முடிதிகழாக் கோஹிநூர்
அகல்வானில் தோன்றுத அற்புதநற் புதுவெள்ளி
மன்பதையின் வறுமைதவிர் மாண்புடைய நல்வயிரம்
புன்முறுவல் தவழ்முகத்துப் போதுமென்ற
[நன்மனமே.

செல்லடா !

செல்லடா !
முன்னெழுந்து செல்லடா !

சரணம்

முன்வைத்த காலைப்
பின்வைக்க லாகுமோ ?
உன்னத லட்சியம்
உச்சியிலுள்ளது—செல்லடா !

உச்சியென் றாலும்
உள்ளம் மலைக்காதே
கச்சை வரிந்தே
கட்டிப் புறப்பட்டுச்—செல்லடா!

ஜோதியைப் போலே
தூரத்தில் காணுது
சீதக் கதிர்மணித்
தெய்வக் கிரீடம்—செல்லடா !

தாய்சிறைப் பெய்தவே
சாவை எதிர்த்துநீ
பாய்புலி நாணிட
மார்பை நிமிர்த்தியே—செல்லடா !

ஆரடா அங்கே
அணியைக் குலைத்தவன்?
பாரடா முன்னால்
பாரத னல்லநீ?—செல்லடா !

அங்கம் தளர்ந்தாலும்
நெஞ்சம் தளராதே
பொங்கும் குருதியில்
புன்னகை செய்துநீ—செல்லடா!

நாற்பது கோடியும்
நல்லின்பந் துய்த்திட
ஆர்ப்பரித் தேயெழுந்
தைக்கிய மாகநீ—செல்லடா!

கார்த்திகைப் பிறை

கார்த்திகை மாதம் கருமேகம் வானத்தைப்
போர்த்துச் சளசளெனப் பூமழைதான் பெய்கிறது.
விடாத மழைதன்னில் வெம்மை தணியுமென்றே
கெடாத கதிரோனும் கண்மறைந்து திரிகின்றான்!
ஊரெங்கும் தண்ணீர் ஊற்றெடுத்துப் போகிறது;
காடெங்கும் வித்திட்டுக் கரும்பச்சை தான்தரித்து,
ஓங்கிவந்த சோளம் உழவன் மனம் வாடச் [வில்லை.
சோர்ந்து வெளுத்ததுவே; செங்கதிர்கள் தோன்ற
எப்பொழுதும் மாலை இளவெயில்போலேதோன்றும்
ஒப்பரிய காலமதில் ஒருமாலைப் போதினிலே
தென்னஞ் சிறுதோப்பைத் தேடியே சென்றங்கு
சின்னஞ் சிறுமழலைச் சிங்காரப் பேச்சுடைய
நாகணவாய்ப் புட்கள் நாவொடுங்கி வீற்றிருந்து
நாளும் நனையிறகை நடுங்கி யுலர்த்துகின்ற
தோற்றமதில் நெஞ்சம் தோய்ந்திடவே வீற்றிருந்
ஆற்றப் பெருஅமைதி அரசு செலுத்திற்று; [தேன்.
ஓலை நுனியில் ஒளிர்முத்துப் பூத்ததுபோல்
ஆலும் துளிவிழுந்து அமைதி பெருக்கிற்று.
சோம்பி எருமைகள்போல் தூங்கியே ஊர்கின்ற
மேகத் திடையிருந்து மெல்ல விழுவதுபோல்
இருள்கூட லாயிற்று; இன்னும் பரவவில்லை.
ஒருமேகம் மேற்கில் உயரப் பறந்ததுபார்!
கண்டேன் கருந்திரைதான் கருணை புரிந்திடவே;

கண்டதொரு காட்சி கற்பனைக்கு மெட்டுமோ தான்?
நிலவின் இளங்கீற்று! நான் கண்டேன்! நான்
[கண்டேன்!
உலக மகள் நுதலில் உவமையில்லாப் பட்டமோ?
பைங்கொண்டற் பார்வதியைப் பாகத்தில் வைத்
[துப்பின்
சங்கரனுர் தஞ்சடையில் தான்தரித்த தனிக்கலையோ?
மதனன் இளவேனில் வருநாளில் தானேந்தப்
புதிதாய் அமைந்ததொரு பேரழகுப் போர்வில்லோ?
கந்தருவச் சிறுமியர்கள் ககனப் பெருங்கடலில்
உந்திவிளை யாடும் ஓடத்தின் ஒளியுருவோ?
வானத் திடைத்தோன்றும் வடிவில்லாப் புன்
[சிரிப்போ?
காணக் கிடைக்காத கார்த்திகைமூன் ஞம்பிறையே;
கலையொன்று கொண்டே கவின்பெருக்கி நிற்கின்ருய்
அலையமுது தான்பெய்ய அன்று வந்த பொற்கிண்ணீ!
என்றெண்ணி நான்நிற்க இளஞ்சிறுமி மின்வளைவு
சென்று மறைந்திட்டாள் சிந்தை திறைகொண்டே!

நினைவு அலைகள்

நெஞ்சிலே ஆயிரம் ஆயிரம் நினைப்புக்கள், எண்ணங்கள், ஆசைகள் எழுந்து சதா அலை மோதுகின்றன. ஆனால் இருபதாம் வயதிலே, இளமையிலே அவற்றின் போக்கே வேறு; ஐம்பதாம் வயதிலே, முதுமை எய்துகின்ற காலத்திலே அவற்றின் போக்கே வேறு. எல்லோருக்கும் அல்ல—பெரும்பாலோருக்கு.

இருபதில் :

மண்ணிலே உயர் தேவநல் லின்பத்தை
வளரச் செய்துநான் யார்க்கும் வழங்குவேன்!
விண்ணிலே அந்தத் தாரகைக் கூட்டத்தில்
வீடமைத்துப் புதுஉல காக்குவேன்;
கண்ணிலே ஒளி காட்டும் அழகியர்
காதல் என்றிடில் சாதலுக் கஞ்சிடேன்;
தண்ணென் மாமதி தன்னைப் பிழிந்துமே
சாறெடுத்துமின் தங்கமும் பண்ணுவேன்.

மாந்தர் யாவரும் ஓர்நிலை தன்னிலே
வாழும் இன்பச் சமூகத்தை நாட்டுவேன்;
சாந்தி அன்பறம் எங்கும் தழைத்திடத்
தளர்விலா துழைத் தேஜயங் கூட்டுவேன்;
கூந்தல் நீண்ட இளங்கொடி மேனியர்
கூறிடிற்கட லேழும் சுருட்டுவேன்;
காந்த மின்பொறி ஞான மனைத்தையும்
கண்டுழைப்புச் சலிப்பை வெருட்டுவேன்.

ஆண்டு நூறுக்கு மேலிங்கு யாவரும்
அமரவாழ்வு பெறவழி காணுவேன்;
யாண்டும் பூவும் பொலிவும் கலைகளும்
ஈண்டிஓங்கும் பலபணி பூணுவேன்;
மூண்டகாதல் மடந்தை முறுவலில்
மோதும் உள்ளக் கருத்தும் முடிப்பன்யான்;
நீண்ட நல்லின்ப வீடிது தானென
நீள் நிலத்தையும் மாற்றி அமைப்பனே.

ஐம்பதில் :

மண்ணிலே யெனக் குள்ளதெண் காணியே,
மற்றோர் காணி பிடித்திடச் சூழுவேன்;
வெண்ணெய் போலொளிர் சுண்ணநற் சாந்திஞல்
வீடுகட்டி நான் சொந்தமாய் வாழுவேன்;
பெண்ணிலே யொரு பேதையைக் கொள்வதால்
பிறவி நோய்தனைப் பெற்றதைத் தேர்ந்துளேன்
பண்ணும் ஊழியர் தம்மைப் பிழிந்துமே
பங்கயத் திருச் சேர்க்கவே நாடுவேன்.

மாந்தர் யாவரும் ஓர்நிலை யென்னுமோர்
வாசகம் பொய்க் கதையெனக் கண்டுளேன்;
காந்தி கொண்டபொற் காசுகள் ஈட்டலே
கருதுவேன் இனிக் கனவுகள் கண்டிடேன்;
கூந்தலுக் கொரு வாசநெய் வேண்டுவார்
கூறைச்சேலை நகையெனக் கூவுவார்
சாந்தியோ டிங்கு வாழவிடு வரோ?
சற்றுமில்லை நான் முற்று மறிந்திட்டேன்.

மீண்டு மோர்முறை ஜாதகம் பார்ப்பதும்
விரைவில் பெண்ணுக்கு மன்றல் முடிப்பதும்
தூண்டில் போட்டுச் சொர்சு பிடித்துமே
துரைத்தனப் பணி மகனுக்கு வாங்கலும்
மாண்டு போகுமுன் செய்திட வேலைகள்
வரையிலாதன கையி லிருப்பன
நீண்டிருக்கும் பொதுப் பணி செய்யவே
நேரமிங்கெனக் கேதுநீர் சொல்லுவீர்.

சோதனை

அன்பொரு வடிவுகொண் டமர்ந்தது போலப்
பொன்னொளிர் வதனப் புத்தனு மிருந்தான்—
வந்தனன் இடிக்குரல் வளையெயிற் றரக்கன்
வெந்தழல் பொங்கும் விழிதமைப் பிதுக்கி
வானமும் அதிர்ந்திட வையமும் துளங்கிட
மோனமும் கலைந்திட மொழிக்கனல் சொரிவான் ;
"அன்பர சுலகினில் அமைக்கவோ நினைத்தாய்?
அன்பினைப் பகைமை அழித்திடல் காண்பாய் :
உன்றனை விழுங்கிநான் ஒழித்திடுவே னிதோ"
என்றனன். சாந்தியின் இருப்பிட மன்னோன்
கமலமென் கையினைக் கருணையால் மலர்த்தி
அகமதில் சினமோ அச்சமோ இலாமல்
செவ்விதழ் அரும்பிய சிறுநகை தவழ
இவ்வித முரைப்பான் ; "இன்னுயிர்த் தோழனாய்
உன்னையும் கொண்டனன் ; உகந்தது புரிவாய்"
என்னுமிம் மொழிகேட் டிருங்கக னத்திடை
ஓங்கினின் றுருமிய உரித்தவாய் அரக்கன்
ஆங்கொரு புறவின் வடிவினை அடைந்தான்.
"அன்பினைப் பகைமையால் அழிக்க வொண்ணாதே ;
என்பும் பிறர்க்கென இருப்பவர் வெல்லுவார்,
நித்திய வாழ்வினில் நிலைபெற் றிருப்பார்,
சத்தியமிது" வெனச் சாற்றினன், பறந்தான்
ஐயனின் மனத்திடன் அறிந்திடப்
பொய்யுரு வெடுத்துப் போந்தவத் தேவனே.

வளையெயிற்று—வளைந்த பற்களையுடைய. துளங்கிட நடுங்கிட.

அறிவு தெளிந்தேன்

எண்ணம் வானில் எழுந்து பறந்திட
எண்ணிலாமனக் கோட்டைகள் கட்டினும்,
கண்ணைத் தைத்துச் சிறகைத் துணித்திட்ட
கருடன் போலச் செயலின்றி நின்றனன் ;
மண்ணோர் இன்பநல் வீடென மாறவும்,
வாழ்க்கை இன்னிசைக் கீதமாய்ப் பாயவும்
பண்ண ஆவி துடிக்கின்ற தாயினும்
பாதை காணத் திறனில்லை என் செய்வேன்.

என்று நானும் வருத்தி இருக்கையில்
எங்கிருந்தோ அவன் வந்துமுன் தோன்றினன் ;
நின்ற தோற்றமும் நீள்விழிப் பார்வையில்
நிலவு சாந்தியின் பேரொளிக் கூட்டமும்,
மன்று ளாடிய மாதவன் வேடமும்,
வாகை சூடிடும் வெற்றி முறுவலும்
நன்றென் உள்ளம் கவரப் பணிந்தென்றன்
நலிவு கூறி அறிவுரை நாடினேன்

உள்ளத் தேகனல் விட்டெழும் ஆர்வமும்
உறுதி யும்மிகுந் தாலவை போதுமால்;
வெள்ளிமாமலை தன்னையும் தூக்கலாம்;
விண்ணை இங்கு கொணரவும் செய்யலாம்;

தள்ளி இந்தக் கலக்கத்தை விட்டு நீ
தளர்வி லாமல்உ ழைத்திடு வாயெனக்
கொள்ளை கொள்ளும் நகைதவழ் பேச்சினில்
கூறினு னந்த ஞானப் பொலிவினன்.

கூடி யாரும் உழைத்திட வந்திடார் ;
குறும்பு பேசித் தடைபல சூழுவார் ;
தேடில் எங்கணும் வீண்பழிச் சொல்லலால்
சிறிதும் இல்லை உதவியென் றேறுதினேன்.
கோடி இன்னல்கள் வந்திடும் என்றுநீ
குறுகி நின்று கணக்கிடு வாயெனில்
நாடி இன்னும் அநேகம் குவிந்திடும்
நன்மை காணல் அரிதெனச் செப்புவான்;

அச்சம் நீங்கித் தயக்கமும் தள்ளிநீ
ஆண்மை யோடுமு யன்றிடும் போதினில்
துச்ச மாகும் எதிர்ப்பும் பகைமையும் ;
தோழ ராகப் பலர்வந்து கூடுவார்;
மெச்சி யுன்றன் பணியினில் சேருவார் ;
வெற்றி காணலாம் நிச்சயம்; ஆதலால்
கச்சை கட்டிப் புறப்படு வாயென்றான்—
கலக்கம் நீங்கி அறிவு தெளிந்ததே.

மனங் கசந்து போனதுவோ

அன்பின் திறங்காட்டி
அனைவருக்கும் சுகம் பெருக்க
இந்நிலத்திற் கேகவைத்தாய்
எத்தனை பேர் என்னிறைவா!
ஆசியநற் சோதியென
அன்று வந்தார் ஒரு புத்தர்;
ஏசுமுனி பின் வந்தார்
எருசலத்தின் தவப் பயனாய்.
எம்மிடையே காந்தி வந்தார்
இன்னருளின் குரல் கேட்டோம்.
மும்மதிகள் சூழ்ந்தொளிரும்
முழுமணிகள் பல கண்டோம்.
ஐயனுரை பாரிலெங்கும்
அசோகன் பரப்பியபின்
மெய்யினிலே ஆணியிட்டார்
வீணர் கிறிஸ்து நாதருக்கு.
இந்தியமண் மீததுபோல்
என்றேனும் நிகழ்ந்திடுமோ
என்றுரைத்துப் பெருமை கொண்டோம்,
இந்நாளில் தலைகுனியப்
பாரதத்தின் தந்தையவர்
பைங்குழந்தை நெஞ்சினிலே

ஈரமிலா வெறிக்கிறுக்கால்
        ஈயமிட்டுப் பழிகொண்டோம்.
காந்திமகான் அன்புரையும்
        கன்னித்தாய் சேய்மொழியும்
சாந்திவளர் கௌதமனார்
        சாற்றியதும் மறைந்தனவே!
கருணைப் பெருங்கடலே
        கருதறிய நற்பொறையே
குருட்டுச் சுயநலத்தின்
        கொடுமையிலும், நீதந்த
அறிவை முறைப்படுத்தி
        ஆழ்ந்துணராச் சிறுமையிலும்
கறைபட்டுக் குறியிழந்த
        கண்திறவா மக்களிடம்
தந்தையுன்றன் உளத்தினிலே
        தயை ஓங்க வழியுண்டோ?
இன்னுமுமக் கெங்களிடம்
        இரக்கம் பெருகிடுமோ?
மக்களினம் செய்கின்ற
        மதியீனம் பொறுப்பாயோ?
தக்கவரை மேன்மேலும்
        தரணிக்குப் போக்குவையோ?
மனங்கசந்து போனதினல்
        மன்பதையைத் தான்முடிக்க
அணுக்குண்டை அனுப்பினையோ
        அறிந்திலனே என்னிறைவா.

மானிடா எழுக

1

மாண்பு மிக்குடைய மானிடா எழுக
வையகந் தன்னை வானக மாக்குக
புன்மையும் சூதும் பொய்ம்மையும் செய்து
உன்பெருங் குலமே ஒழிந்திடப் புரியேல்.

2

இறைவன் படைப்பினில் இப்பூ வுலகம்
ஒருபிடி மண்ணதில் ஓரணு நீதான்!
ஆயினும் உலகோ டகிலாண் டங்களும்
சாயவும் துளங்கவும் தழைந்து மேலோங்கவும்
வலியுடை எண்ணம் மனத்தினிற் கொள்ளும்
அலகிலா ஆண்மையோ டமைந்தவன் நீயே;
மாண்பு மிக்குடைய மானிடா எழுக
வையகந் தன்னை வானக மாக்குக.

3

இறைவன் நினைக்குமுன் எழுந்திடும் உயிர்களில்
சிறுபுழு முதலாச் செறிந்தவை நாடில்
எண்ணிறந் தவையாம்; இவைகளுள் ஒருவன் நீ;
என்னினும் வரிப்புலி இடிக்குரற் சீயம்

மதம்படு கரியெலாம் வணங்கிட அடக்கும்
முதற்படுந் திறமையில் முதிர்ந்தவன் நீயே.
மாண்பு மிக்குடைய மானிடா எழுக
வையகந் தன்னை வானக மாக்குக.

4

ஞாலமீ துன்றன் நனிசிறு வாழ்க்கையும்
காலவெள் ளத்தினிற் கண்டதோர் திவலையாம்;
உண்மையி தாயினும் ஓதுமக் காலமும்
வண்மையாற் கடந்து வாழ்ந்திடும் செயல்கள்
விண்ணுளோர் கண்டு வியப்புறும் படியாய்ப்
பண்ணிடும் அருந்திறல் படைத்தவன் நீயே ;
மாண்பு மிக்குடைய மானிடா எழுக
வையகந் தன்னை வானக மாக்குக.

5

அழிந்துபோ யொருநாள் அனலிடை மூழ்கி
ஒழிந்திடும் யாக்கையை உடையவன் ஆயினும்
செயற்கரும் பணியால், தீஞ்சுவைக் கலைகளால்,
உயிர்க்குளே நின்றிடும் ஒருவனை அறிவதால்
என்றும் புவிதனில் இருந்திடும் சிறப்பினை
நன்றுநீ கொண்டனை; நலமெலாம் பெருகவே
மாண்பு மிக்குடைய மானிடா எழுக
வையகம் இன்றே வானக மாக்குக

கடிதம்

'கறுப் பெ'ன்றுனைப் பழித்தார்
கவலை நான் கொள்ளவில்லை ;
'விருப்புற்று நீ யுரைக்கும்
வேல் விழிக ளெங்கெ'ன்றார்.

மதுவில் மயங்கிடுங் கார்
வண்டு நிகர் நின் கண்கள்
வதியும் ஒளி யறிய
மதியில்லார் என் நண்பர் ;

'பார்த்திட்ட மங்கை யெலாம்
பஞ்சத் தழ கென்பாய்,
சீர்த்தி மிகும் அஜந்தா வின்
சித்திரம் போல் வேணு மென் பாய்

எங்கடா நீ புகழ்ந்த
எழிலெல்லாம்? உன்மனதை
இங்கே பறி கொடுக்க
என்ன தான் கண்டு விட்டாய் ?'

என்றே பல பல வாய்
ஏளனங்கள் பேசுகின்றார் ;
குன்று உயிர்க் காதல்
கொழுந்திடச் செய்யுனை யறியார்

நகைப்பைக் கண் டொரு சிறிதும்
நான் சோர வில்லை ; இன்று
முகங் கோணி வார்த்தை சொன்னாய்
முடிவில்லை என் துயர்க்கே.

நீல மலர்க்கண்

நீல மலர்க்கண் ணிரண்டு—என்றன்
நெஞ்சை மயக்கிடும் வண்டு
மாலை இருளென வளரும்—அவள்தன்
மைக்குழ லில் உளம் தளரும்

கன்னக் குழிமதுத் தேக்கும்—அதுவென்
காதலை மீறியுண் டாக்கும்
மின்னைப்போல் தோன்றும் சிரிப்பு—கொஞ்சம்
வேறுபட் டாலெங்கும் நெருப்பு

கொஞ்சும் மொழிகுயி லோசை—அதிலே
குமிழியிட் டோங்குமென் னாசை
கஞ்ச மலர்முகைக் கொங்கை—ஏந்துங்
கவின்நிறை வாளந்த மங்கை

அமுதுடன் வந்தசெய் யாளோ—என்மேல்
அன்பு சிறிதும்செய் யாளோ
எமனுக்கு நானின்று தத்தம்—மீட்கவே
எண்ணிடு மோ அவள் சித்தம் ?

காந்தி அடிகள்

சாந்தத்தின் நல்லுருவம்
சத்தியத்தின் குடியிருப்பு
தர்மநெறி அன்பஹிம்சை
தழைத்தோங்கும் தனிக்கோயில்

காந்தியெனும் பெயர்கொண்ட
கருணைஒளிச் சுடர்விளக்கு
கலியுகமாம் காரிருளைக்
களைந்தோட்டும் அருட்சோதி

மாந்தருக்குள் ஒரு மஹாத்மா
மதிமயங்கி அணுக்குண்டாம்
மரணவிளை யாட்டினிலே
மகிழ்வெய்தும் வையகத்தே

போந்தற்கோர் எச்சரிக்கை
புகன்றுசென்ற மெய்ஞானி
பாரதத்தின் தனிப்பெருமை
புத்தன் வழிதழைக்க வந்த புனிதனுமே.

வீரன் வழிநடைப் பாட்டு

ஜேய் ஹிந்த் ஜேய் ஹிந்த்
ஜெய ஜெய ஜெய ஜெய
ஜேய் ஹிந்த் ஜேய் ஹிந்த்
ஜெய ஜெய ஜேய் ஹிந்த்—ஜேய்ஹிந்த்

பாரத வீரா !
தோளினைப் புடைப்பாய்
பாரெலாம் அதிர்ந்திடக்
கோஷமிட்டெழுவாய் !—ஜேய் ஹிந்த்

உன் திறல் காட்டிட
உலகெலாம் நடுங்கிட
வந்தது பெரும்போர்
வாழ்கெனப் பாடுவாய்—ஜேய் ஹிந்த்

சண்டையின் குமுறல்
சிந்தையின் அமுதம்
அண்டம் பிளந்திட
ஆர்ப்பரித் தோதுவாய்—ஜேய் ஹிந்த்

தாய் புகழ் ஓங்கிட
வீறுகொண் டெழுவாய்
பாய் புலி போலே
சீறிமுன் செல்வாய் !—ஜேய் ஹிந்த்

ஆயிரம் ஆயிரம்
அளவிலா உயிர்கள்
தாய் பணிக் காகத்
தந்திட வருவாய் !—ஜேய் ஹிந்த்

சீற்றம் பொங்கிடச்
சிறுமைகள் நொறுங்கிடக்
கூற்றினை நகைத்தே
கூவி அதிர்ப்பாய் !—ஜேய் ஹிந்த்

நாற்பது கோடியாம்
நம்மனோர் வாழ்ந்திட
ஆற்றலும் ஆண்மையும்
அவனியிற் காட்டுவாய்!—ஜேய் ஹிந்த்

அடிமையின் வேண்டுகோள்

என்மனைக் கேகிடும் இவ்வழி அறிவேன்—
மனைவியும் அங்கே வழிபார்த் திருப்பாள்;
இரவெலாம் என்றனைக் காணு தேங்கிக்
கவலையால் உள்ளம் கசிந்தழு திருப்பாள்;
குழந்தைகள் இரண்டும் குலைகாய்ந் திருக்கும்;
கண்ணீர் வடித்துக் கதறியே துடிக்கும்.
ஆயினும் அவ்விடம் போயென் செய்வது ?
கையினில் இருந்த காசெலாம் கடையிலே
கள்ளின் வெறியிலே கரைந்துபோய் விட்டது.
வாய்வழிந் தோடிய பேய்க்கள் நனைத்திடத்
தலைதனைப் பாதையில் சாய்த்துநான் இரவெலாம்
உருண்டு கிடந்தேன் உணர்வில் லாமல்:—
இந்தமு கந்தினைக் கொண்டுநான் இல்லம்
எப்படிச் செல்வது ? என்னைக் கண்டதும்
துயரெலாம் மறைத்துச் சிறுநகை காட்டி
வந்தழைத் தேகும் மனைவியின் முன்னே
வெறுங்கை நீட்டினுல் பருக்கையும் வேகுமோ ?
வாடிய வயிறுகள் மகிழ்ந்து நிறையுமோ ?
அப்பா எனவரும் அருமைக் குஞ்சுகள்
உப்புக் கூழும் உண்டிட லாகுமோ ?
சீச்சீ இந்தச் சிறுமையேன் செய்தேன் ?
மதியிழந் தொவ்வொரு மாலையும் அந்தக்
கடையினை நோக்கியே காலிழுக்கின்றது;
காலையில் பிறக்கும் உறுதியும் கவலையும்
மாலையில் மறைந்திடும் மாயமென் தெரியேன்.
மறைந்து மறைந்துநான் வளர்த்தஇப் பழக்கம்
இறுகப் பிடித்தெனை என்றும் அடிமையாய்ச்

செய்ததே அந்தோ ! சீரெலாம் குலைந்தேன்.
வாட்டமே அறியா மனைவியும் வாடவும்;
வறுமையும் பிணியும் மனைதனில் புகவும்
சிறுமைநான் செய்தேன் ; தேனினும் இனிப்பினுள்
மறுகிட ஒருநாள் குடிவெறி மயக்கினுல்
தடிகொண் டடித்தேன்; சத்தியம் தவறினேன்;
கடையிருந் தால் நான் கடைத்தேற லேது ?
பிடியதி லிருந்து பிழைத்திட வேறொரு
வழியெனக் கில்லை ; மக்களின் சார்பாய்
அரசியல் நடாத்தும் அறிஞரும் இந்த
அரக்கனை இன்னும் அழித்திடா தேனே
இங்கும் அங்குமாய்த் தடைவிதிக் கின்றார் !
அதனுல் வரும்பணம் அடிமையென் போல்வார்
குழந்தைகள் வயிற்றினில் கொட்டிய நெருப்பிலும்
முதிர்நடை தளர்ந்த முதியோர் பதைப்பிலும்,
மதிநிகர் மனைவியின் வாடிடும் நெஞ்சினில்
பாய்ச்சிய தீயிலும் பண்ணிய தல்லவோ ?
பணமிதைக் கண்ணினுல் பார்க்கவும் தகுமோ ?
வழியினிற் கடைவலை வைத்தெமைப் பிடிக்கும்
வழிப்பறிக் குதவியாய் வாழ்வதோ அரசு ?
சிந்தையை மயக்கித் திருடிடும் பொருளால்
நாட்டினை ஆண்டிடும் நாகரிகத் தோரே !
நொந்திடும் ஏழையின் நிந்தையும் சாபமும்
கள்ளுப் பணத்தினில் கண்டறி யீரோ ?—
ஆதலால் மதுவாம் அரக்கனை இன்றே
மாய்த்திடுவீரே ! மதியிழந் துள்ளோர்
விலங்கினை உதறி விழிபெற்று
நலங்குலை யாமல் நாட்டினில் வாழவே.

குறிப்பு : அரசாங்கத்தார் சில மாவட்டங்களில் மட்டும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்து மற்ற இடங்களிலும் அதைக் கொண்டு வருவதா, கொண்டுவந்தால வருவாய் குறையுமே என்று யோசனை செய்த காலத்தில் பாடியது.

யவனன் பாட்டு

கிளையில்லை நிழலில்லை
பூவில்லை கனியில்லை
பொன் பசுமை கரும் பச்சை இல்லை
தழையில்லை தழைத்திடவும் இனியோர்
அரும்பில்லை மொக்கில்லை
வேரில்லை மேதினியில் பற்றில்லை
மென்காற்றின் தழுவலினால் விளையும்
சிலிர்ப்பில்லை கலகலப்பும் இல்லை
தேடிவந்து பாடிமகிழ் சிறு பறவை இல்லை
பாலைவனம் வீழ்ந்த இந்தப் பருமரத்தைப் போலே
ஆருமில்லாத் தனியானேன் ஆஹாஹா யுத்தம்!

இரண்டாவது உலக யுத்தத்தில் உயிர் தப்பித் தன்னந் தனியனாய் இந்தியாவில் தஞ்சம் புகுந்த யவன தேசத்தான் ஒருவன் பாடுவதாகத் தழுவற் கவிதை. கிரேக்கநாடு போரிலே பெரிதும் துன்புற்றது. மக்கள் ஆயிரக்கணக்கில் மாண்டனர், ஒரு கணத்தில் மனைவி மக்கள் உற்றார், உறவினர் அனைவரையும் இழந்தவர் எத்தனையோ பேர், அவ்வாறு துயருழந்த ஒருவன் எண்ணங்களை இது தெரிவிக்கிறது.

யாரது?

யாரோ என் கதவைத் தட்டுகிருர்கள்.
யாரது?
யார் என்று கேட்டால் பதில் வருவதில்லே.
நானே கதவைத் திறந்து பார்ப்பதில்லே
உண்டும்
குடித்தும்
ஆடியும்
பொழுதைக் கழிக்கிறேன்!
கதவை யாரோ இடையிடையே தட்டும் சப்தம் மட்டும் ஓய்வதில்லே.
திடுக்கிட்டு ஒரு விஞடி நின்று பார்க்கிறேன்.
உள்ளத்திலே ஓர் ஒளி மின்னுகிறது.
யாரது என்று கேட்கிறேன்.
பதில் வருவதில்லே.
நானும் கதவைத் திறப்பதில்லே.
மறுபடியும் எனது கேளிக்கைகளில் முழுகிவிடுகிறேன்
இடையிடையே யாரோ பொறுமையாய்க் கதவைத் தட்டுகிருர்கள்.
ஆனல் என் களியாட்டங்களே விட்டுப்போய் கதவை திறந்து பார்க்க எனக்கு விருப்பமோ எண்ணமோ இல்லே.

வாழ்க்கைப் பிரயாணம்

ஓடக்காரா
என்னை நீ எங்கு தள்ளிச் செல்லுகின்றாய்?
கொந்தளித்துக் குமுறும் வெள்ளத்தில் அலையவைத்
பாறைகளில் மோதி வேடிக்கை பார்த்தாய். [தாய்
சேற்றிலே புதைந்து அலமரச் செய்தாய்.
பயணம் தொடங்கியது முதல்ஒரே கவலை; ஒரே
[கலக்கம்,
இன்பமென்று கண்டதெல்லாம் கனவாகிவிட்டதே!
சிறிதாவது அமைதி உண்டா?
ஓய்வுண்டா?

ஓடக்காரா, உனக்கு இரக்கமில்லையா?
மோதி அடிபட்டுச் சட்டகமும் கலகலத்துப் போய்
விட்டதே?
அந்திப் பொழுதும் நெருங்கிவிட்டதே?
இனியாவது அமைதியான நீரில் செல்லலாகாதா?
இப் பயணம் எப்பொழுதுதான் முடியுமோ?
உறங்கிக்கிடப்பதும், விழித்துச் செல்வதுமாய்
எத்தனை காலந்தான் கழியுமோ?
எத்தனை உடைகள் மாற்றி மாற்றி அணிவதோ?

ஓடக்காரா
இன்னும் கருணை பிறக்கவில்லையா?

என்னைக் குறியிடம் கொண்டு சேர்க்கமாட்டாயா?
நான் உன்னைக் கெஞ்சுகின்றேனே?
வேறு நான் என்ன செய்ய முடியும்?
எல்லாம் உன்னால்தானே ஆக வேண்டும்?
நீ செலுத்தினால் நான் போகிறேன்,
நீ ஓடக்காரன்; நான் ஓடம்.
நீ உயிர்; நான் உடல்.
நீயின்றி நானென்ன செய்ய இயலும்?
ஓடக்காரா. இன்னும் அருள் சுரக்கவில்லையா?
என்னை நீ எங்கே தள்ளிச் செல்லுகின்றாய்?

அழைப்பு

இளைஞனே எழுந்து நில்
தளையெலாம் இன்றே தகர்த்திடு;
அரியவும் பெரியவும் புரியவந் தவன் நீ
இளைஞனே எழுந்து நில்.

அன்னையும் அழைத்தனள்
இன்னுமோ உறக்கம் எழுந்து நில்;
இன்ப மனைத்தும் கொணர்ந்திடத் துணிந்திடு;
இளைஞனே எழுந்து நில்.

சோம்பலும் சோர்வும்
போம்படி தோளினைப் புடைத்திடு;
வானையும் பிளந்திடும் வன்மைகொண் டவன் நீ
இளைஞனே எழுந்து நில்,

சண்டமா ருதம்போல்
எண்டிசை தன்னிலும் ஏகிடு
புதுப்புதுக் கலைகளும் புதுப்புதுப் பொறிகளும்
புதுமையிற் புதுமை செய்.

பழமையின் உயர்வையும்
அழகையும் நன்றாய் அறிந்திடு;
உன்னருஞ் சாத்திரம் உயர்கலை உடையாய்
இளைஞனே எழுந்து நில்.

குமரியிற் குடைந்திடு
இமயவான் உச்சியில் ஏறிடு
தாய்தரும் இணையிலாத் தனமெலாம் அடைந்
இளைஞனே எழுந்து நில். [திடு

ஞாலமின் புறவே நன்மை செய்
காலம் வருமெனக் காத்திருப் பவன் செயான்
இன்றே செய்திட இன்னே செய்திட
இளைஞனே எழுந்து நில்.

அன்பு வழி

மக்களெலாம் தேவர்களாய்
　　மாறவொரு வழியுண்டு
மனம் படைத்த பெரும்பயனும்
　　மனிதனுக்கு வாய்த்திடுமாம்;
தக்கபடி மனம் மலரத்
　　தந்திரமும் நாமறிந்தால்
தாரணியை விண்ணுடாய்ச்
　　சமைத்திடலாம் நிச்சயமாய்.
மனம் என்னும் பெருங்குரங்கு
　　மாயத்தின் பெருஞ்சூழ்ச்சி
வாழ்வெல்லாம் தந்திடவும்
　　தாழ்வெல்லாம் சூழ்ந்திடவும்
கணத்தினிலே சொர்க்கமதும்
　　கணத்தினிலே பாழ்நரகும்
காட்டவல்ல மனக்குரங்கு
　　கடவுளரின் பெருங்கொடையாம்.
மாயமனக் குகையினிலே
　　மச்சுண்டு; மேல்மாடி
வாழ்ந்திருப்போர் தேவர்கணம்;
　　மற்றந்தக் கீழ் நிலையில்
தாயறியா விலங்கினங்கள்
　　தலையில்லாப் பெரும்பேய்கள்

தாழ்வளிக்கும் உணர்ச்சியெலாம்
தங்கியுறை பெருநரகம்.
அன்பரசு வீற்றிருக்க
அருளாட்சி மேல் நிலையில் ;
அவ்வாட்சி ஓங்கிவிட்டால்
அனைத்துலகும் இன்பமன்றோ?
அன்புசெய்தால் தேவநிலை;
அதையழித்தால் விலங்காவோம்;
ஆதிமுதல் தொடர்ந்துவரும்
பூதகணத் திரையாவோம்.
ஆற்றல்மிகும் மானிடனே,
அறிவாலும் மனத்தாலும்
அற்புதமாம் கற்பனைகள்
அவை செயலில் வெற்றிகண்டாய்;
காற்றினிலே பறந்துவிட்டாய்;
கலைகள் பல தோற்றுவித்தாய்;
கனவாய் நினைத்தவெலாம்
கைகூடச் செய்துவிட்டாய்;
அண்டம் அளந்துவிட்டாய்.
அணுவைப் பிளந்துவிட்டாய்.
அளவில்லாச் சாதனைகள்
ஆனாலும் உன்னகத்துள்
மண்டுமிருட் கொடுங்குகையை
மடை மாற்றி ஒளியேற்ற
வகையறியாக் கீழ்நிலையில்
வாய்த்த வெற்றி யென்னபயன் ?

அறிவெதற்கு? மனம் எதற்கு?
    அனைத்தையுமே அழிப்பதற்கோ?
ஆக்குதிறன் எல்லாமுன்
    அழிவுக்கே வழிசெயவோ?
இறகுபெற்ற சிற்றெறும்பு
    எழுந்துபறந் தெரிதீயில்
விழுந்தழிந்து மாய்வதுபோல்
    வித்தையினுல் மாய்ந்திடவோ?
விலங்குணர்ச்சி மாய்க்காமல்
    வெற்றிபல பேசியென்ன?
வெளியியற்கை வெற்றியெலாம்
    மெய்வெற்றி யாகாது.
உலகெல்லாம் ஒருசேர
    ஒழிக்கவல்ல படைகண்டோம்;
ஒழிந்திடவோ மக்களினம்
    உயரத்தான் செய்வோமோ?
நெருக்கடியிந் நிலையினிலே
    நீசமனப் புன்மையெலாம்
நீங்கிடவே நல்லறிவால்
    நிச்சயித்து மனம்விரிய
உருத்தெழுந்து நிற்போமோ?
    உடல்வளர்ச்சி யோர்நிலையில்
ஓய்ந்துமெல்ல நலிவதுபோல்
    உள்ளம் நலிந்திடுமோ?
புல்லாகி மரமாகிப்
    புழுபறவை விலங்காகிப்

7

புத்தி மனவாற்றல் மிகும்
மனிதனாய் வந்ததுடன்
நில்லாமற் பரிணாமம்
நாம் வளர்க்க மாட்டேமோ?
மனமிதற்கு வலியிலையோ?
வளரத்தான் மாட்டாதோ?
வாய்த்த மனம் குறுகியதோ?
வானுயர விரிந்திடுமோர்
வல்லமையும் இதற்கிலையோ?
மற்றவுயிரன்றி மனிதனுக்குள் ளேதானும்
மக்கள் மனைஉற வென்றும்
மாவட்டம் தேசமென்றும்
கற்பனையில் எல்லைகட்டிக்
காசினியைப் பிரித்த ழிக்கும்
இச்சிறுமை தாண்டிடவும்
இம்மனத்தால் ஆகாதோ?
எல்லையுற்ற குட்டையிதோ?
எழுந்து பொங்கி எங்கணுமே
அன்புவெள்ள மாய்ப் பெருகும்
ஆற்றலிலாச் சிறுமையிதோ?
அனைத்துயிரும் உயிரில்லா
அனைத்துமே ஒன்றென்னும்
பரந்துணரும் அன்புடனே
பரிணமிக்கும் வன்மையிந்த
மனத்திற்கே இல்லையெனில்
மனிதனிதைத் தன்னறிவால்

மாற்றிடவும் ஆகாதோ?
மரணந்தான் இதன் முடிவோ?
மானிடனே, இல்லை இல்லை,
இக்கருத்தை நான் ஏற்கேன்;
புத்தனென்றும் இயேசு வென்றும்
புனிதமுனி காந்தி யென்றும்
வாடுமிளம் பயிர்கண்டு
வாடுமருள் வள்ளலென்றும்
இத்தரையில் வந்தவர்கள்
இம்மனமும் அன்பினிலே
எவ்வுயிரும் தன்னுயிராய்
எண்ணும்வகை காட்டுவித்தார்;
வன்மையுண்டு மனத்திற்கும்
மலர்ந்ததுவும் ஓங்கிவிடும்;
எழுந்திரடா புறவெற்றி போதும்;
இனி அகவெற்றி நாடிடுவாய்;
மென்மை உணர்ச்சி யெலாம்
மேலோங்கச் செய்திடுவாய்;
விண்ணொளியால் குகையிருட்டை
விழுங்கிடவே செய்திடுவாய்;
அன்பினிலே மனம்மலர
அமரனைப்போல் வாழ்ந்திடுவாய்;
இன்பம் பெருகி யெங்கும்
எவ்வுயிரும் மகிழ்ந்திடவே
அன்புவழி அன்புநிலை
அன்புச் சிவமாவாய்
அன்புவழி யோங்கிவிட்டால்
அமரநிலை வந்திடுமே.

காதலி கடிதம்

ஓர் இளநங்கை
அழகுக்கு அழகு செய்யும் அழகி
மதனனே மயங்கிவிழும் வனப்புடையாள்
சிற்றோடை யொன்றில்
சேலை துவைத்திருந்தாள் :
கட்டழகன் காளை
காவலனும் கண்ணுற்றான்; காதலித் [தான்
'மங்கையே உன்னை
மணக்க மிக விழைகின்றேன்;
சங்கையுற வேண்டா
தரணிக்கு நாயகன் நான்.
மேற்கொண்டு நான் செல்லும்
வினைமுடித்துக் கூப்பிடுவேன்,
வரவேணும்' என்றிரந்தான் :
பாவை உடன் பட்டாள்—
சென்றுவிட்டான் இளவேந்தன்
காத்திருந்தாள் பெண்ணமுது
காதலினால் ;—
மங்கைப் பருவம்போய்
வயோதிகமும் வந்ததன்றே;
மேனி சுருங்கிற்று :
முகமதியம் கலைமாறிச்
சாகும் பருவத்தைச்
சார்ந்துவிட்டாள் கற்பரசி.

'அண்ணலை நான் மற்றொருகால்
    காண்பேனோ?
கண்டாலே பாக்கியமே'
    என்றே அரசுறையும்
எழில் நகரம் தான் வந்தாள்:
    மன்னவனைக் கண்டாள்;
மற்றவன் தன் வார்த்தை சொன்னான்;
'ஐயகோ அரசுப் பெரும்பாரம்
உள்ளத்தில் மலையாகி
    உன் நினைவைத் தான் புதைத்து
அறவே மறந்துவிட ஆக்கினதே!
மற்றோர் இளமாதை
    மணம் புரிந்த காலத்தும்
உன்னை மறந்தேனே, ஐயையோ!
பெண்மை அணிவிளக்கைப்
    பெருந்துயரில் வைத்தேனே'
என்னத் துயர் உழந்தான்;
கன்னியும் சோர்ந்தாள்;
காதற் கடவுளுக்குக் காணிக்கையாய்ச்
சேர்ந்தாள்.

உதயச் சுடர்நாட்டில்
    உற்ற அவலமிது:—
காதல் மறதியினால்
    கன்னி உயிர் வாடுவதை
இக்கதையிற் கண்டோம்
    என்கதையும் இதுதானோ ?

காதல் ஏக்கம்

பட்டிக் காட்டில் வளர்ந்த பசப்பறியா இளமங்கை ;
வெட்டி யலங்கரித்து வளர்க்காத காட்டுப்பூ ;
சுண்ண மறியாத சோதி முக முடையாள் ;
கண்ணுக்கு மையில்லை; கடைக்கண்ணிற் குறும்பில்லை;
செயற்கைக் குழல்சேர்த்துச் சிங்காரஞ் செய்யாத
இயற்கைவனப்புடனே என் முன்னர்த்தோன்றி
நின்ற
மங்கைதனைக்கண்டு மனது பறிகொடுத்தேன்.
எங்கும் அவள் தோற்றம் என்னைப் பரவசிக்கப்
பெண் கொடுக்க வேண்டுமெனப் பெற்றோரைக்
கேட்டிடவே
சொந்தக் காரர்சிலரைத் தூதாகப் போக
விட்டேன் ;
"பத்தாவது தானும் படித்திருந்தால் பத்தாது,
சொத்து சுகமென்ன?" வென்றார் ; சோர்ந்துமே
நான் விழுந்தேன்.
காதல் தன முண்டு ; காணி தனம் குறைவே.
ஆதலினால் பெண் கொடுக்க அவர் மறுத்து
விட்டாரே.
"உடல் வலிமையுண்டு; ஊக்கமுடனே யுழைப்பேன் ;
கடலைக் கடந்தேனும் காதலியைக் காத்திடுவேன்?
காசு பெரிதோ ? காதல் பெரிதெ"ன்றேன் :

கூசாது நான் சொல்லக் கலியுகத்தின் விந்தையென்று
பெற்றோர் சிரித்தார், பேச்செடுக்க வேண்டா
மென்றார்
உற்றாரும் உள்ளுக்குள் ஊறுஞ் சிரிப்புடனே
கைவிட்டு விட்டார்கள்; கண்ணேநான்
செய்வதென்னே ?
நொய்பட்டு வாடுகின்றேன் நிவர்த்தி யொன்றுங்
காணேனே !
உன்கண்ணிற் காதல் உயர்ந்தோங்க நான்கண்டேன்
பின்னுன்றன் உள்ளம் பெற்றோர் அறிவாரோ?
மேல்வீட்டுச் சின்னப்பன் மெத்தப் பணக்காரன்;
கால் நடைகள் கணக்கில்லை கழனிகளும்
தோப்புகளும்,
அவனுக் குனைக்கொடுக்க ஆசையுட னிசைந்து
விட்டார்.
"தவனை யொன்றுமில்லை சடுதியிலே செய்திடலாம்
கண்ணாலம்" என்றார்; கருத்ததனைத் தானறியப்
பெண்ணை யுளங் கேட்கும் பேதமையை
யார்செய்வார்
ஆடுகளை விற்பதுபோல் அடுக்களையில் வைத்துப்பின்
கூடி மணம்பேசிக் கூசாமல் தள்ளிடுவார்;
பஞ்சாங்கம் பார்ப்பவரைப் பத்துத்தரம் கேட்பார்;
கொஞ்சும் மதலைகளைக் கனவிலுமே கேட்டறியார் ;
பணப் பொருத்தங் கேட்பார், பல சீர்கள்
கேட்டிடுவார் :
மணப் பொருத்தங் கேட்பார், மனப் பொருத்தங்
கேளாரே!

காதல் ஏக்கம்

கண்ணின் மணியே, கனிரசமே, கற்கண்டே!
பெண்ணரசே யுன்றன் பிரியமதை நானறிவேன்;
உள்ளமதை நீயுரைப்பாய், உன் தாயுங்கேட்டறியாள்
தெள்ளு தமிழ் நாட்டில் நலேக்காதல் முன்னுளில்;
கற்றறிந்தார் போற்றும் கலித்தொகையும்
அகநூலும்
கற்றுக் களித்திடலாம் கண்டதுண்டோ இந்நாளில்!
"இங்கிலீஷ் படிக்கப் போய் இவனுமே
கெட்டுவிட்டான்;
எங்கும் இவனேப்போல் யாரையுமே கண்டதில்லே"
என்றெந்தன் பந்துக்கள் ஏசி யிகழ்கின்ருர்.
கன்றி மனம் வெந்து குலேகின்றேன் கண்மணியே.
அரைக் காணி நிலமுண்டு அதையுழவும் எண்ண
மில்லே;
புரையுண்டபுண்போலப் பொங்குகின்ற
தென்னெஞ்சம்.
காதல் தனியேரால் காமனதை யுழுகின்ருன்;
சாதல் எனக்குத்தான் தண்ணமுத மாகுமின்றே.
என் நோய் பெரிதில்லே; எப்படியோ சாகின்றேன்;
உன் நோய் தனேத்தீர்க்க ஒருவழியங் காணேனே!
வாழ்நாள் முழுவதுமே வருந்தி யுளத்த முந்தி
ஊழ் வினேயை நொந்து உயிர்த்திடுவாய் ஐயையோ!
கண்ணீர் தனேயுகுத்துக் கரந்திருந்து விம்மிடுவாய்;
எண்ணுதன வெண்ணி ஏங்கிடுவாய் என் செய்கேன்?
பண்டைத் தமிழ்நாடு பாரினிலே வாராதோ?
கெண்டை நிகர் கண்ணுர் கனவருத்தந் தீராதோ?

அவலம்

அவலமெனும் பேயரக்கன் அன்றொரு நாள் வந்தான்-
அவனுருவம் கண்டவர்கள் அஞ்சுதலும்
வியப்போ?
குழிந்த கன்னம் குழிந்த விழி கூரீட்டி போலே,
இழிந்து பல திசைகளிலும் ஏகும்முடி தாடியுடன்
வானகத்தே ஓங்கிவளர் மரக்கூட்டம் நிறைந்த
கானகத்துக் குகைதோன்றும் கரடியென நின்றான்.
மேனியெல்லாம் அவன் தரித்த விருதுகள்தாம்
என்னே!
மேனியிலான் வாளியினால் வீழ்ந்த பல உள்ளம்,
காடுசென்று தவங் கிடந்து கதிகாணான் கலக்கம்,
கோடிபல சேர்ந்த பின்னும் குறையாத
பேராசை—
இப்படியாய் எண்ணிலவாம்: 'இவையெல்லாம்
என்றன்
செப்பறிய திறல்காட்டும் சில பதக்கம்' என்றான்:
"செத்தவரை எண்ணியழும் கண்ணீரில் தினமும்
மெத்த மகிழ்ந் தாடிடுவேன்; நத்தியவர் உயிரைத்
தின்றிடுவேன்; உன்னையும் நான் சேர்ந்திருக்க
வந்தேன்"—
என்று சொல்லித் தான் நகைத்தான், இடி
முழக்கம் கேட்டேன்;
"என்னிடத்தே வந்தனையோ? இருப்பாய் நீ நன்றே;
பரிகாசம் பகடி செய்து நகையாட எனக்கே
அருகேயோர் அசடுவழி ஆளொருவன் உனைப்போல்
வாய்க்காது வா"வென்றேன்; வந்தவழி பார்த்துப்
பாய்ந்தானோ பறந்தானோ பதில்சொல்லக்
காணேனே.

விதி

தேன் சுவை விரும்பிச் செயற்கரும் இருலே
நான் தொடச் சினந்து நஞ்சினைப் பாய்ச்சிக்
கொட்டிய தேனீக் கொடுக்கினை யிழந்து
பட்டு மடிந்து பாரினில் வீழ்ந்தது;
பிறர் பொருள் வவ்விப் பீழையான் உற்றேன்;
பொறை தவிர்ந் தமையால் பொன்றிய
தது வுமே.

பெலால் சென்

பெலால் சென் என்பவன் சரித்திர சம்பந்தமான வடநாட்டு வீரர்களில் ஒருவன். நெஞ்சத் துணிவும் நிகரில்லாப் போர்த் திறனும் வாய்ந்தவன். பல போர்களிலே வெற்றி கண்டவன். அவன் ஒரு இளமங்கையைக் காதலிக்கிறான்; அவளும் அவனைக் காதலிக்கிறாள். திருமணம் நடக்கிறது. பின்பு அவன் தன்னுடைய கோட்டையைவிட்டுப் புதியதோர் போருக்குப் புறப்பட நேர்கிறது. காதலியின் நெஞ்சங் கலங்குகிறது; பாட்டு இங்கே தொடங்குகிறது.

"நெஞ்சுகலங் காதேயடி பெண்ணே—கண
நேரமதில் வென்றுமீள்வேன் கண்ணே
வெஞ்சமர மிதுபோ லநேகம்—நான்
வென்றதைநீ கண்டபின்னேன் சோகம்?"

"சென்றபின்பு நாளுமென்றன் நாதா—அமர்ச்
சேதியிங் கனுப்பமுடி யாதா?"
என்றுமயில் நைந்துருக வேதான்—எண்ணி
ஏதுரைப்பான் பெலால்சென், "நீதான்

கண்டறிய வகையொன்று செய்வேன்—நானும்
கையிலென் புறுவெடுத்துச் செல்வேன்;
மண்டமரில் நான்மடிந்தால் மானே—உனை
வந்தடையும் அந்தப்புறுத் தானே."

தந்துசொலிக் கந்துகத்தில் தாவ—அது
தாண்டியது மங்கைமனம் நோவ.

முந்திவந்த பகைவரை வேலால்—பெலால்
மோதியுயி ருண்டுவரு வானுல்.

செத்தவர்கள் கணக்கில்லை யன்று—வளர்
தீரனவன் களங்கொண்டான் வென்று.
கத்துகுயில் மொழியாளைக் காண—அவன்
கடுகிவந்தான் காற்றுவேகம் நாண.

சூரியனும் மேற்றிசையில் வந்து –எங்கும்
சூழுமிருள் கண்டனன் சிவந்து;
ஆரியனும் மல்லகதி பறந்தான் களிப்பில்
அங்கையிற் புருவின்பிடி மறந்தான்.

விண்ணிலது படபடத்து நேரே—ஒரே
வேகமதாய்ச் சென்றதவன் ஊரே.
வண்ணப்பரி தட்டிவிட்டான் உள்ளம்—சால
வதவதக்கத் தாண்டும்மேடும் பள்ளம்.

கோட்டைதனில் நுழைகின்ற போதே –அங்குக்
கொழுந்துவிட்ட தீகண்டான் தீதே;
மீட்டுவந்த வெண்புறவு கண்டு --அந்தோ
வீழ்ந்துவிட்டான் நாதனெனக் கொண்டு

தீக்குளித்தாள் கற்பரசி நொந்தே—அந்தத்
தீரனும் துடித்தான்உளம் வெந்தே.
தேக்கெறியும் எரியிடையே சென்முன்
—"என்றன்
தேனேவந்தேன் உன்னுடன்நான்"
என்முன்.

தியாகம்

பல ஆண்டுகளாக நாட்டிலே மழை பெய்யவில்லை. குடிக்கக் கூடத் தண்ணீர் அற்றுபபோய் விட்டது. மக்களெல்லாம் வாடினர். அவர்களுடைய துன்பங்கண்டு அரசன் உள்ளம் பதைத்தான். குடிதண்ணீருக்காகவது வகைசெய்ய வேண்டுமென்று பெரிய கிணறொன்று வெட்டினன். எவ்வளவு ஆழம் வெட்டியும் கிணற்றில் ஊற்றே வரவில்லை. அரசனுடைய வருத்தம் கரை கடந்துவிட்டது. அந்த நிலையிலே பாடடுத் தொடங்குகிறது. இப்பாடல் அஸ்ஸாமியக் கதை யொன்றைத் தழுவி உருவாகியுள்ளது

'மாரி பொழிய வில்லை—வெட்டும்
மாபெருங் கேணியிலும்
நீரினைக் காணே னந்தோ—என்றன்
நெஞ்சங் குமுறு கின்றேன்.

நீதி தவறினனோ—அன்றி
நேர்மை குலைந்தே னோ?
ஏது பிழை யறியேன்—மக்கள்
இடரில் அழுந்தினரே.'

என்றெண்ணி மன்னவனும்—துயர்
ஏறி உறங்கிடுங் கால்
கண்ட கொடுங் கனவை—அவன்
காதலிக்கே யுரைப் பான்;

' நாகினி தேவிக்குனே—பலி
நல்கிடின் நீர் பெருகி
வேகமாய் ஊறிடுமாம்—இது
விண்ணவர் தம் முடிவாம்.'

அம்மொழி கேட்டவுடன்—முகம்
அன்றலர் தாமரையாய்ச்
செம்மொழி கூறுகின்றாள்—அன்பின்
தெய்வ மேயன்ன மங்கை.

'குடிதுயர் தான் களைதல்—உயர்
கொற்றவன் தன் கடனும்.
கடிமணம் செய்தவர்க் காய்—வாழ்தல்
கன்னியர் தங் கடனும்.

ஆதலின் என் பதியே—என்னை
அர்ப்பணம் செய்திடுவீர்.
காதற் கணவனுக்கும்—மக்கள்
கண்ணீர் துடைப்பதற்கும்

சாகக் கொடுத்து வைத்தேன்—இதிற்
சாலச் சிறந்த தில்லை;
தேக மெடுத்தபயன்—இன்று
தெய்வங் கொடுத்த' தென்றாள்.

மன்னன் மனங் குழம்ப—மறுநாள்
மக்கள் உளந் துடிக்க
மின்னெனக் கேணியுளே—நங்கை
வேகமாய்ச் சென்றடைந்தாள்.

ஆழக் கிணற்றினுள்ளே—மறைந்த
அன்புருக் காணுமலே
தாழுங் குரலினிலே—மன்னன்
தயங்கியே கேட்டிடு வான் :

வேறு சந்தம்

'என்ற னுயிர் பைங்கிளியே—கமலா!
எவ்வள வில் தண்ணீர் வந்த துரையாய்.'
'என்ற னுயிர் ஆன இன்ப நாதா!
என்றன்முழங் கால் அளவில் வந்த திங்கே
[தண்ணீர்.'

'என்ற னுயிர்ப் பைங்கிளியே—கமலா!
எவ்வளவில் தண்ணீர் வந்த துரையாய்.'
'என்ற னுயிர் ஆன இன்ப நாதா!
இடுப்பளவில் தண்ணீரிப்போ வந்திருக்கு
திங்கே.'

'என்ற னுயிர்ப் பைங்கிளியே—கமலா!
எவ்வள வில் தண்ணீர் வந்த துரையாய்.'
'என்ற னுயிர் ஆன இன்ப நாதா!
என் கழுத்தை எட்டிவந் திருக்குதிங்கே
[தண்ணீர்.'

'என்ற னுயிர்ப் பைங்கிளியே—கமலா!
எவ்வள வில் தண்ணீர் வந்த துரையாய்.'
ஒன்றும் பதில் வந்த தில்லே; ஆங்கே!
உவகையுடன் அழுகையுமாய் மன்னன்
மக்கள் நின்றார்.

நீதி தவறினனே அன்றி நேர்மை குலேந்தேனே --குடிகளின் துன்பத்திற்குத தனது தவறே காரணம என்று எண்ணி அரசன் வருந்துகிருன். நாகினிதேவி—பாதலத்தில உள்ள தேவதை. எனற னுயிர்ப் பைங்கிளியே—இவ்வாறு ஒரே சொற்றெடர் பல்லவி போலப் பல முறைவருவது காதை வரியின் ஓர் இலக்கணம்.

வீரன் குமரன்

காந்தியடிகள் தோற்றுவித்த சாத்விகப்போர் எத்தனையோ பேரை வீரர்களாகவும தியாகிகளாகவும செய்தது. அப்போரில் பஙகுகொண்டு உயிர்த்தியாகம செய்தவர்களில் திருப்பூர்க் குமரனும் ஒருவர். அந்தத் தியாக வரலாறு இஙகு கூறப்படு கிறது.

''அன்பின் வடிவமாம் அன்னையே—உன்றன்
அடிமலர் வாழ்த்தி வணங்கினேன்;
இன்பமு டன்விடை நல்குவாய்—நானும்
என்பணி தேசத்திற் காற்றுவேன்'

என்று குமரன் பணிந்திடத்—தாயும்
இளநகை செய்துரை யாடுவாள்:
''நன்றுகு றித்தனை மைந்தநீ—வளம்
நாடும் திருப்பூரின் செல்வமாம்;

சாத்விகப் போரெனில் தைரியம்—நெஞ்சில்
சாலவும் வேண்டும்நீ கொண்டுளாய்;
ஆத்மிக சக்தியும் அன்பறம்—வெல்ல
ஆருயிர் ஈந்தும் கடன்செய்வாய்;

தேடற் கரிய மகாத்மாவை—இந்தத்
தேசத் தலைவராய்ப் பெற்றுளோம்;
பாடற் கரிய தமிழ்மகன்—புகழ்
பாரெங்கும் வீசிடச் செல்லுவாய்.''

அன்னையின் இன்மொழி கேட்டனன்—அவள்
அடிமலர் கண்களில் ஒற்றினன்;
"சொன்ன அறிவுரை போற்றுவேன்—உங்கள்
சூரத் தமிழ்மர போங்கவே."

வாங்கினன் கையிற் கொடியினை—நீல
வானில் ஜொலித்தது மூவர்ணம் ;
பாங்கினில் அன்னையும் நெற்றியில்—வெற்றி
பாடித் திலகம் அணிந்தனள்.

"ஜய ஜய பாரதம்" என்றுமே—கூவித்
தலைநிமிர்ந் தேகினன் காளையும் ;
"ஜயஜய" என்றுபல் லாயிரம்—மக்கள்
சாற்றிப் பின்சென்றனர் வீதியில்.

பேரொலி அண்டம் பிளந்தது—அடிமைப்
பிடியும் மனத்தில் தளர்ந்தது ;
வீரக் குமரனோர் சிங்கம்போல்—தடை
மீறிப் பவனியாய் வந்தனன்.

வெள்ளையர் விட்டெறி காசுக்காய்—மானம்
விற்றுப் பிழைத்திட்ட சேவகர்
கள்ளனைத் தேடிப் பிடியென்றால்—அவனைக்
காட்டிற் பிடிப்பமென் றேகிடும்

சூரரத் தாசர் தலைவனும்—ஒரு
சௌத்தைப் பயல்வந்து தோன்றினன்
பாரதம் வாழ்கெனக் கூறினால்—அவன்
பார்த்துச் சகித்திடல் ஒண்ணுமோ ?

8

வீரன் குமரன்

அந்நியர் ஆட்சிதன் கைத்தடி—அதன்
ஆணையால் நின்றதென் றெண்ணியே
முன்னணி தன்னிற் கொடியுடன் வரும்
மொய்ம்புடை வீரன் குமரனை

மண்டையி லோங்கி யடித்தனன்—அந்த
மண்டையில் மூளையில் லாதவன் ;
கண்டவர் உள்ளம் கொதித்தது—வீரன்
"காந்திக்கு ஜே" யென்று கூவினான்.

சாந்த முனிபெயர் கேட்டதும்—மக்கள்
சற்றுத் தணிந்தனர் கோபத்தீ ;
"காந்தியின் ஆணையை மீறிடோம்—பகைக்
கைத்தடி தன்னையும் சீறிடோம்"

என்று குமரன் இசைத்திட்டான்—அவன்
இன்மொழி வாய்மேல் அடித்தனன்.
குன்றுபோல் நின்றந்த வீரனும்—ஜய
கோஷத்தை மேலும் முழக்கினான்.

மார்பிலும் கையிலும் காலிலும்—தாசன்
மாறி யடித்தனன் வேகமாய் ;
பார்வை கலங்கிற்றப் போதிலும்—வீரன்
"பாரத பூமிக்கு ஜே" யென்றான்.

மிருக பலமொரு பக்கமாம்—ஆன்ம
மேன்மைப் பலமொரு பக்கமாம் ;
தரும பலமொரு பக்கமாம்—கொடுந்
தடியின் பலமொரு பக்கமாம்.

உடலை நொறுக்கி யடக்கினுல்—நெஞ்சில்
ஓங்குபேர் ஆர்வம் ஒடுங்குமோ ?
கடலின் கொதிப்பைக் குறுந்தடி—வீச்சிற்
கட்டுப் படுத்தவுங் கூடுமோ ?

கொடியும் பறந்தது வானிலே—ஆனுல்
குமரன் மயங்கி விழுந்தனன் ;
வடியுங் குருதியும் மண்மிசை—அடிமை
மாசைத் துடைத்துப் படிந்தது.

"என்னை அடித்த அடியெலாம்—பாரத
அன்னை விலங்கை உடைத்தன ;
முன்னைப் புகழ் அவள் எய்துவாள்—கடைசி
மூச்சில் இதைநானுங் கூறினேன்.

ஜயஜய பாரதம்" என்றனன்—அந்தத்
தாயும் மடியினில் ஏற்றனள் ;
"ஜய! ஜய!" என்றனர் யாவரும்—குமரன்
சத்தியம் போல்புகழ் தாங்கினுன்.

கிழவியும் ராணுவும்

ராணு பிரதாப சிம்மன் ஓர் ஒப்பற்ற வீரன். அழி யாப் புகழ் படைத்தவன். டெல்லிச் சக்கரவர்த்தி யாகிய அக்பரை எதிர்த்து நின்று பல போர்கள் செய்தவன். ஆனுல் பல முறை அவன் தோல்வியுற நேர்ந்தது. தனது சித்தூர்க் கோட்டையையு மிழந்து ஆரவல்லி மலைத்தொடரிலே அலைந்து திரிந் தான். கோட்டையை மீட்பதே தன்னுடைய லட்சிய மாகக் கொண்டிருந்தான். அதை அடைவதற்கு எவ் வளவோ துன்பங்களை அனுபவித்தான். இடையிலே அவன் ஒரு சமயம் சற்று உள்ளம் தளர்ந்து நாட்டை விட்டுச் சிந்து நதிக்கு வடக்கே சென்றுவிடத் தீர் மானம் செய்து புறப்பட்டதாகச் சரித்திரம் கூறு கிறது. ஆனுல் உண்மையில் அவன் அவ்வாறு சென்றுவிடவில்லை. செல்லாமல் திரும்பியதற்குக் காரணமாக ஒரு கற்பனைச் சம்பவம் பாடலிலே வரு கின்றது.

புயல் வெடித்துப் படீரெனப் பொங்கவும்
பொய்ய ருள்ளம்போல் வானம் கருத்தது;
உயர வானிடை நீங்கிடும் புள்ளெலாம்
உயி ரொடுங்கிச் சிதறி யடங்கின.

சூறைக் காற்றுப் புலியெனச் சீறியே
சுற்றிச் சாடி வளைத்து மரங்களைக்
கூறும் பேயென நாற்றிசை ஆட்டிடக்
கொந்த ளித்தது காட்டும் புறமெலாம்.

குன்றுக் கூட்டச் சரிவினில் ஒண்டியாய்க்
குச்சு வீடொன்று தென்படக் கண்டதும்
சென்று வாயிற் கதவினைத் தட்டினன்
செரு விழந்தவத் தேயத்து மன்னனே.

நடை தளர்ந்தமூ தாட்டியும் மெல்லவே
நடை திறந்தனள் உற்றுற்று நோக்கினுள்;
விடை பகர்ந்திலன் மன்னவன் உட்சென்ருன்,
விரித்த ஓலைத் தடுக்கினில் சாய்ந்தனன்.

தோற்றம் கூறக் கிழவியும் பால் கனி
துரித மாகமுன் வைத்து வணங்கியே,
"ஆற்றல் மிக்கவிந் நாட்டின் அதிபரோ?
அடியன் காணவே வந்ததென்?" என்றனள்.

"நேற்று நாள்வரை உன்றன் அரசன்நான்
நிலை குலைந்து படையுந் துறந்தின்று
காற்று வாக்கில் துரும்பென வந்துளேன்;
கனியும் பாலும் எனக்கெதற்?" கென்றனன்.

"போர் புரிந்த களைப்பெலாம் ஆறியே
புதிய வெற்றிக்கு ஏகவே" என்றனள்;
"ஆரு மற்ற அனுதையாய் இங்கு நான்
அடைந் தனன்இனிப் போரில் மனமில்லை;

"நாட்டை நீங்கிப் பயணமாய்ச் சிந்துவாம்
நதியைத் தாண்டித் தொலைவினில் போகவே
ஓட்ட மாகவே வந்தனன்; சூறையில்
ஒண்ட நல்லிடம் தந்தனை வாழ்" கென்ருன்.

"என்றன் ராணுப்ர தாபனே பேசுவோன்-
இந்தச் சொல்லையச் சிங்கமும் சொல்லுமோ?
நின்ற வீரமும் ஆண்மையும் இற்றைநாள்
நீணி லத்தைவிட் டேகிய தோ?" வென்ருள்.

"மான மின்றி ரஜபுத்ர மன்னர்கள்
மண்டி யிட்டுப் பணிந்தனர் அக்பரை;
மான சிங்கனும் மைத்துனன் என்றனன்;
மாட்சி கெட்டது நம்மனோர் வம்சமே.

"சொந்தத் தம்பியின் சொல்லைப் பொறுக்கிலார்
சேரம் செய்யும் அயலனைச் சூழ்கிருர்;
தந்தை நாட்டினை விற்றுப் பிழைக்கிருர்;
தாச ராகக்கை கட்டி உழைக்கிருர்.

"துணைவ ரின்றிப் பலபல சண்டைகள்
தோற்ற தாலென் றன் வீரரும் சோர்ந்தனர்;
பிணியில் நொந்தனர்; பசியினில் மாழ்கினர்;
பேசுங் கோட்டைச்சித் தூரும் இழந்திட்டேன்.

"ஆர வல்லியக் குன்றில் அலைந்தனம்-
அரிய போர்பல செய்து முயன்றனம்;
சூர தீரங்கள் காட்டினேம் ஆயினும்
தோல்வி யேயினிச் சமரெனக் கென்ன சொல்."

"பார தத்தினைக் காத்திட நம்மிடைப்
பார்த்தி பன்நீர் உண்டென நம்பினேன்;
போரெ டுத்தநற் போதெலாம் மைந்தரைப்
போக வென்றுநான் வாழ்த்தி அனுப்பினேன்.

"நாதன் வீழ்ந்தபின் நால்வரென் காளைகள்
நடுகல் பெற்றிடும் வீரராய்ப் போரினில்
மோதி மாண்டனர்; தன்னந் தனியளாய்
முற்றும் நும்புகழ் கூறிநான் வாழ்ந்துளேன்.

"ஈனப் பேச்சுநீர் பேசிடல் ஏன்?" என்றாள்:
"என்ன செய்வ"தென் றேபிர தாபனும்
மோன மாய்த்தலை அங்கையில் சேர்த்துமே
முன்னர் கொண்ட முடிவினையே சொன்னான்.

நரம்பெ ழுந்துவ லியற்ற கையினள்
நாக மென்னவே சீறி எழுந்தனள்.
அருகில் தொங்கிய வாளை எடுத்தனள்
"அத்த, கேளிந்தச் சோர்வு பொறுக்கிலேன்.

"வீர மங்கையர் கோடியிங் கேயுளார்
வெல்லும் வீரரைப் பெற்றுத் தருவர்காண்;
பாரத தப்பெயர் மங்கிடா தோங்கவும்,
பார் மதிக்கும் ரஜபுத்ர வீரந்தான்

"கறை யிலாதொளி வீசவும் நீரின்றே
கடுகச் சென்றுபோர் மீண்டும் இயற்றுவீர்:
மறையு மென்றன்பே ராணை யறிகுவீர்-
மார்பு சேர்செங் குருதியால் செப்பினேன்"

என்று வாளைத்தன் மார்பில் புதைத்தனள்,
இரத்தம் சோரிட வாயில்முன் சாய்ந்தனள்;
நின்ற வீரன் திகைத்துப் புதியதோர்
நிச்ச யத்துடன் கட்டுரை கூறுவான்:—

"பெண்க ளுக்கணி யானதோர் அன்னையே
பேசும் வார்த்தையைக் கேட்டுயிர் நீங்குவாய்-
மண் ணிதையினி மீட்குமுன் கையினில்
வாங்கும் வாளினை விட்டுப் பிரிந்திடேன்.

"உன்றன் ஆவிநற் சாந்தியை எய்துக;
உயிரின் நல்லவர் நாதனும் மைந்தரும்
சென்ற வீரத் தலத்திடைச் சேருவாய்;
திரும்பி னேன்சித் தூரையே மீட்குநான்."

புயல் மடிந்தது மன்னன் உளந்தனில்
புத்து ணர்ச்சியும் பொங்கிச் சுரந்தது;
"ஐய மடைந்திடு வேன்தனி நின்றுநான்
தளர்வு தீர்ந்தனன்" என்று முழங்கினன்.

பிருதிவிராஜ்-சம்யுக்தை

பிருதிவிராஜ் சம்யுக்தையைக் காதலித்தான். ஆனால் பகைமை கொண்டிருந்த ஜயசந்திரன் தன் மகளை அவனுக்குக் கொடுக்க மறுத்ததோடு அவளை வேறொருவனுக்கு மணம் செய்ய நிச்சயித்துச சுயம்வரத்திற்கு ஏற்பாடும் செய்துவிட்டான். சுயம்வர நாளன்று பிருதிவிராஜ் சமயுக்தையைத் தூக்கிச் சென்ற துணிகரவரலாறு அனைவரும் அறிந்தது. அதுவே பாடலாக இங்கு உருவாகிறது.

மங்கை சுயம்வர நாளிது;
வந்தனர் மன்னர் பல்லாயிரம்
அங்கையில் மாலையை ஏந்தியே
அவையில்சம் யுக்தையும் போந்தனள்.

ஆரங் கரங்கொண்ட ஆரம்போல்
அசைந்து நடக்கிறாள் கூட்டத்தில்
ஆரங் கவள்முகம் நோக்கிடார்?
ஆர்முக மும்அவள் நோக்கிலள்.

பிருதிவி ராஜனுக் கோலைதான்
போக்க மறுத்ததோ டாங்கவன்
உருவச் சிலையொன்று செய்துமே
ஒள்ளணி வாயிலைக் காத்திடும்

சேவகன் போலவே வைத்தனன்
தெளிவில் ஜயசந்த்ர ராஜனே;
பூவைதன் காதலற் கத்தனும்
புன்மை புரிந்ததைக் கண்டனள்.

நையு முளத்தின ளாகியே
நாடிப் பலபல வெண்ணினுள்;
பைய நடந்தவள் வாசலில்
பதுமை இருப்பிடம் நண்ணினுள்.

"நற்சிலை யாகவே வந்தநீ
நாதன்" எனமாலை சூடினுள்;
பொற்சிலை போன்றவள் சோகத்தால்
பொருமியே சாய்ந்தனள் மூர்ச்சையாய்.

தரையினிற் பூவுடல் சேருமுன்
தாங்கின காதலன் கைகளே!
மறைவினில் நின்றவன் பிருதிவி
மங்கையை ஏந்தியே பாய்ந்தனன்.

ஒருத்தர் துணையின்றிச் சிங்கம்போல்
ஓங்கிய காதலால் வந்தவன்
கருத்தை உணர்ந்திடும் புரவிதான்
காற்றினைப் போலப் பறக்குமால்.

கொம்பனை யாளையோர் கையினில்
கூரிய வாளொரு கையினில்
நம்பிக் குதிரையை விட்டனன்
நாலுகால் பாய்ச்சலில சென்றதே.

கூடிய மன்னர் திகைத்தனர்,
கூறினர் வஞ்சினம் கோபமாய்;
ஓடிய பேர்களோ ராயிரம்,
உருபரி ஊர்ந்தவ ராயிரம்.

வாள்களோ ராயிரம் மின்னவே
வல்லமை பேசினர் ஆயினும்
வேளினைப் போன்றவன் தன்னையும்
மின்னிடை யாளையும் கண்டதார்?

ராதை பாட்டு

கையிலுள்ள கண்ணாடி நீ
கார் குழலில் தேன் மலரும் நீ
மைவிழியில் பாவையுமே நீ
மார்பகத்தில் கஸ்தூரி நீ
என்றனுயிர் மூச்சின் மணம் நீ
என் கழுத்தில் இன்பமாலை நீ
இந்த உடல் தந்த சுகம் நீ
என்னகத்தின் களஞ்சியமும் நீ
பறவைகளின் நீள் சிறகும் நீ
பாய்ந்து மிளிர் மீனுக்குநீர் நீ
உறவெனக்கு நீயெனவே நான்
உள்ளமதில் இன்புறுவேன் காண்
உயிரின் உயிர் என்றுனையே நான்
உவந்துளதுன் சம்மதமோ சொல்
மயல் பெருகும் வேய்ங்குழலில் என்
மாதவனே கீதம் வந்ததே.

வித்தியாபதி பாடலைத் தழுவி எழுதியது.

எந்த வகை உணர்ந்தீர்?

அந்திப்பொ ழுதிலென்னை வந்தணைந்தவர்—சொன்ன
அன்புமொழி எண்ணியெண்ணிப் பொங்கு
முள்ளமே;-
"கந்தம் அவிழ்ந்தமலர்க் கன்னியழகை-என்றன்
கண்ணிணைகள் வீசிடவே கண்டறிந்தீரோ?
சந்தம் முரலும்வண்டின் கீதவொலியைக் - கையில்
தரித்த வளைகள் பேசக் கேட்டறிந்தீரோ?
சொந்தம் உமக்குநானென் றெந்தவகையில்-இங்கு
தோன்றக் கரங்கள் ரண்டும் தொட்டிழுத்தீரே?
எந்த வகையறிந்தீர் என்ன துணிவோ? - அதை
என்றனுக் கேயுரைக்க வேண்டுமென்றேனே" -
"வந்துனைப் பார்க்குமுன்னர் உள்ளமிரண்டும் - மண
வாழ்வினில் ஒன்றிநின்ற உண்மை பொங்கிற்றே;
எந்த வகையுணர்ந்தேன் என்று கூறவே - எனக்
கேது மொழி?" என்றிதழில் முத்தம் நிறைந்தார்.

பாரதி

பெருமையெலாம் மறந்துநின்ற தமிழ்நாட்டு
மக்களைத்தம்
பெருமையறிந் தோங்கியெழக் கவிகள்
சொன்னான்
ஒருவனுக்கே உணவில்லை என்னிலந்தக் கருணையிலா
உலகினையே அழித்திடுவோ மென்று சொன்னான்
தரணியிலே அனைவருமே தாழ்வின்றி இன்பங்கூடிச்
சரிநிகராய் வாழ்வமென்று முழக்கம் செய்தான்
அரியநவ பாரதத்தை ஆக்கும்கவி பாரதியாம்
அவன்புகழை யியம்பிடவும் வார்த்தை
யுண்டோ?

ஆசை இளநங்கை

1

ஆசை யிள நங்காய்—நீதான்
அழகின் எல்லையாளுய்
காசில் எழில்எனுமோர்—மணியால்
கடைந்த நற்சிலையே!

2

நீலக் கடல்விழிகள்—அமுதம்
நிறைத்த பொக்கிஷமோ?
கோலக் கவிதையெல்லாம்—கன்னக்
குழியில் காண்பதென்னே!

3

செவ்வி யிவையனைத்தும்—ஒருங்கே
சிறுமை யெய்திடவே,
கொவ்வை யிதழிடையே—முத்துக்
கோவை காணுதடி

4

கண்ட நாள்முதலாய்—உள்ளத்தில்
கனல் வளருதடி
அண்ட ருலக இன்பம்—அதனை
அணைக்க லாகாதடி.

5

அன்புச் சிரிப்பதனுல்—நீயே
அகங் குளிரச் செய்வாய்
துன்பம் துடைக்கவல்ல—மோகனச்
சோலைப் பசுங்கிளியே!

கண்ணுதல் போல

புத்தனும் இயேசுவும் பிறந்த இப்பாரினில்
இத்தனை கொடுமைகள் எப்படி முளைத்தன?
உலகம் உயிர் பெறவே உயிரீந்தான் கிறிஸ்துமுனி;
உலகம் உய்கென்றே உயர்புத்தன் தான் துறந்தான்.
அவர்தம் பொன்மொழி அனைவரும் கேட்கவே
புவியினிற் காந்தியும் புகன்றிட வந்தனன்;—
அனைவரும் இன்பமே ஆசையுற்றிருந்தும்
நினைக்கவும் நெஞ்சம் நெக்குறும் தீமைகள்
யாவனே செய்குவன்? யாண்டும் தீமையாய்
ஆவன இன்பம் அளிக்குமோ ஐயகோ!
நஞ்சினைப் பாய்ச்சி நல்லமு துண்ணவோ?
நஞ்சினை யேற்றே மற்றவர் அமுதுணக்
கண்ணுதல்போல எண்ணலே மேன்மை;
விண்ணுல கன்றே தழைந்திடும் திண்ணமே.

ஜய பாரதம்

ஜயபாரதம் ஜயபாரதம் ஜயஹே
ஜயபாரதம் ஜயபாரதம் ஜயஹே
உயருன்னத மலைராஜனருள் குமரீ
உமையாளவள் வடிவாகிய தேவீ —ஜயபாரதம்

அருளோங்கிடும் அன்பாம்நெறி கண்டாய்
அறமே உயர் வாழ்வின் குறி என்றாய்
உலகோர்தொழ உயர்நீதிகள் அருள்வாய்
உலகோர் இனிஒன்றும்வகை புரிவாய்
—ஜயபாரதம்

பகையால் அழி படையால் மிக நொந்தே
பயமோங்கிடு துயர் வாழ்வினில் வெந்தே
வகையேதுமே யறியாப் புவி மாந்தர்
மருளேகிட அருள் வாழ்வினை நல்காய்
—ஜயபாரதம்

ஜயபாரதம் ஜயபாரதம் ஜயஹே
ஜயபாரதம் ஜயபாரதம் ஜயஹே
உயருன்னத மலைராஜனருள் குமரீ
உமையாளவள் வடிவாகிய தேவீ—ஜயபாரதம்